பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
22-9-1993
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper
பக்கங்கள் 06
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
மக்கள் தினசரி
Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | புரட்டாதி 07 | [23-09-1993] | வியாழக்கிழமை | ஓசை 217

## ஆசிரியர்கள் அனைவரையும் பட்டதாரிகளாக்க திட்டம்

இன்னும் ஏழு வருடங்களில் அரசினர் பாடசாலைகளில் உள்ள சகல ஆசிரியர்களும் பட்டதாரிகளாக இருப்பார்கள். இதற்கென பூரண பல்கலைக் கழக அந்தஸ்துடன் நான்கு கல்வியியற் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்படும். இவ்வாறு உயர்கல்வி கலாசார அமைச்சர் லொக்குபண்டார கல்வி இலாகா அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். கல்வியற் கல்லூரிகளினால் நடத்தப்படும் கல்விப் பாடநெறிகளை பூர்த்தி செய்து, சித்தியடைந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு பட்டதாரிப் பட்டம் வழங்கப்படும் என்றும் கொழும்பு, கண்டி, குருநாகல், மாத்தறை ஆகிய இடங்களில் பூரண பல்கலைக் கழக அந்தஸ்துடன் உயர்கல்வி நிலையங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் தமது பணிப்புரையில் (6ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் பாரிய கடற்படை தளம்; காங்கேசனில் அமைக்க முடிவு!

## நவீன வசதிகள் கொண்டிருக்கும்

[கொழும்பு]

காங்கேசன்துறை துறைமுகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பாரிய கடற்படைத் தளம் ஒன்றை அமைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக் கடற்படைத் தளம் காரைநகர் கடற்படைத் தளத்தைவிடப் பெரியதாக இருக்கும் என்பதோடு வடமாகாணத்தில் உள்ள பெரிய கடற்படைத் தளமாகவும் அமையும் எனவும் தெரியவருகின்றது.

மேற்படி கடற்படைத்தளம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் துறைமுகத்தை மையமாக கொண்டே அமைக்கப்படவுள்ளதாக தெரிவருகிறது இத்துறைமுகத்தை விஸ்தரித்து நவீன வசதிகளுடன் கூடிய கடற்படைத்தள மாக்குவதற்கு சிறிலங்கா கடற்படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## போர்க்கைதிகளின் கடிதம் பிரட்மனிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் சிங்கள யுத்தக்கைதிகள் அரசுக்கு அனுப்பிவைத்த கடிதம் அரச அதிகாரியிடம் நேரடியாக கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனிடமே மேற்படி கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தை திரு. பிரட்மன் வீரக்கோன் உடனடியாகவே வாசித்ததாக தெரியவருகிறது. யுத்தக்கைதிகளாகிய எங்களில் யாராவது ஒருவர் தானும் மரணமடைய நேரிட்டால் அந்த மரணத்துக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச) (நி)

## யாழ். அடகு நகைகள் கொழும்பில் மீளளிப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கியின் சகல கிளைகளிலும் அடகு வைத்தவர்களின் நகைகள் கொழும்பிலுள்ள மக்கள் வங்கியின் அடகு நகை மீட்புப் பிரிவில் வைத்து வழங்கப்பட்டு வருவதாக மேற்படி வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் தமது நகைகளை மீளப் பெறாதோர் அடுத்த வருடம் பங்குனி மாத இறுதிக்குள் தமது நகைகளை நகைமீட்பு பிரிவு, மக்கள்வங்கி, இல. 220 டீன்ஸ் றோட், மருதானையில் மீட்டுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் நகை மீட்புப் பகுதி அலுவலக வேலைகள் இன்னும் 6 மாத காலத்துள் நிறுத்தப்பட்டபின் நகைகளை மீட்பதில் காலதாமதம் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் கொழும்பிற்கு நேரில் சென்று அடகு நகைகளை மீளமுடியாத நிலையில் இருப்பவர்கள் தங்கள் சார்பில் ஒரு பிரதிநிதியை அனுப்பி நகைகளை மீட்டுக் கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படுவதாகவும் இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற விரும்புவோர் அண்மையிலுள்ள கிளை முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடபகுதிக்கு ஒயில் கடத்த முயற்சியா?

(கொழும்பு)

வடபகுதிக்கு எடுத்து செல்லப்படுவதற்காக லொறி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பீப்பாய் என்ஜின் ஒயில், பெருமளவு பொலித்தீன் பைகளும் நேற்று பிற்பகல் கொழும்பில் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படு நேற்று பிற்பகல் யாழ். புறப்படவிருந்த லொறி ஒன்றை சோதனையிட்டதாகவும் லொறியினுள் இப்பொருள்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

அண்மையில் 10 தொன் யூரியாவை கப்பலில் கடத்த முய

## சிங்கள தீவிரவாத குழுவினர் ராணுவத்தினுள் ஊடுருவல்!

### புதிய ஆட்சேர்ப்பு முறையால் நெருக்கடி

(கொழும்பு)

புதிதாக இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் தளர்ச்சியான நடைமுறை புதிய பிரச்சினையை உருவாக்கியுள்ளது. இராணுவ ஆட்சேர்ப்பின் போது அவர்கள் தொடர்பாக முழு விபரங்களும் பெறப்படாமல் சேர்க்கப்படுவதினால், தெற்கில் இயங்கும் சில பயங்கரவாத குழுக்களைச் சேர்ந்த அங்கத்தினர்பலர் இராணுவ பயிற்சி பெற்று வருவதாகவும் இவர்கள் மீண்டும் 'பயங்கரவாத' நடவடிக்கைகளில் ஈடுபடும் அறிகுறிகள் தென்படுவதாகவும் தெரியவருகின்றது.

இதுதொடர்பாக கொழும்பு குற்றப் புலன் விசாரணைப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஏ. டபிள்யூ ஜயசூரிய பி. பி ஸியின் சிங்கள சேவை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்ட தளபதியாக பிரிகேடியர் நமூனி

(கொழும்பு)

யாழ். மாவட்ட இராணுவ கொமாண்டராக பிரிகேடியர் ஜே. நமூனி நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். கமாண்டராக கடமையாற்றிய ஜி பி. குலதுங்க சுகவீனம் காரணமாக கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்தே பிரிகேடியர் நமூனி யாழ் மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மன்னாரில் ஷெல் தாக்குதல் இரு பெண்கள் காயம்

[வவுனியா]

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தின் ஷெல் பிரயோகத்தின் போது காயமடைந்த இரு தமிழ்ப் பெண்களும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரிய கீதா [52], தாசினா அம்மா [27] ஆகிய இருவருமே காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## மூதூரில் இராணுவத்தால் தபால் ஊழியர் கைது

மூதூர் நாவலடி சிறிலங்கா இராணுவத்தினர் தபால் ஊழியரான குடும்பஸ்தர் ஒருவரைக் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி திருமலையிலுள்ள மேற்படி முகாம் பகுதியால் சென்று கொண்டிருந்தபோது கட்டைப் பறிச்சானைத் சேர்ந்த இருபிள்ளைகளின் தந்தையான வீரசிங்கம் ரவிச்சந்திரன் (வயது 34)என்பவரையே இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

## கடந்த 10 நாட்களில் 24 பேர் கொலராவால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அத்தியட்சகர் பிரிவில் 7பேர்

இதுவரை காலமும் தமது நகைகளை மீளப் பெறாதோர் அடுத்த வருடம் பங்குனி மாத இறுதிக்குள் தமது நகைகளை நகைமீட்பு பிரிவு, மக்கள்வங்கி, இல. 220 டீன்ஸ் றோட், மருதானையில் மீட்டுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் நகை மீட்புப் பகுதி அலுவலக வேலைகள் அனுப்பி நகைகளை மீட்டுக் கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படுவதாகவும் இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற விரும்புவோர் அண்மையிலுள்ள கிளை முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடபகுதிக்கு ஒயில் கடத்த முயற்சியாம்

(கொழும்பு)

வடபகுதிக்கு எடுத்து செல்லப்படுவதற்காக லொறி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பீப்பாய் என்ஜின் ஒயில், பெருமளவு பொலித்தீன் பைகளும் நேற்று பிற்பகல் கொழும்பில் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்கள் கடத்தப்படுவதை தடுக்கும் குற்றக் கண்டுபிடிப்பு பணியகத்தினர் நேற்று பிற்பகல் யாழ். புறப்படவிருந்த லொறி ஒன்றை சோதனையிட்டதாகவும் லொறியினுள் இப்பொருள்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சிறிலங்கா வானொலி தெரிவித்தது.

அண்மையில் 10 தொன் யூரியாவை கப்பலில் கடத்த முயன்ற வர்த்தகருக்கே இந்த லொறியும் சொந்தமானது என விசாரணை மூலம் தெரிய வந்ததாக பொலிசார் கூறினர்.

## யூரியா கடத்தல் முயற்சி விவகாரம்
## அரச அதிபர் உட்பட அதிகாரிகள் மீது விசாரணை

(கொழும்பு)

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மற்றும் யாழ் சமநல சேவைகள் திணைக்கள உயர் அதிகாரி ஆகியோர் கொழும்பில் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

"ருஹுணு" என்ற கப்பல் மூலம் கொழும்பில் இருந்து வடபகுதிக்கு யூரியா உரத்தைக் கடத்திச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் விடயம் தொடர்பாகவே இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக கொழும்பில் இருந்து எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (ஈ), (நி)

## மட்டு. மாவட்டத்தில் நெற் செய்கைக்கு தடை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் பகுதி ஒன்றில் 5000 ஏக்கர் காணியில் காலபோக வேளாண்மை செய்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

உறுகாமம் பகுதியில் உள்ள சந்தன ஆற்றுக்கு மேற்கேயும் முகுந்தன் ஆற்றுக்கு மேற்கேயும் உள்ள சுமார் 5000 ஏக்கர் விவசாய நிலத்தில் பெரும் போகத்தில் விவசாயம் செய்ய இராணுவம் தடைவிதித்துள்ளது.

இத்தகவலை பிரிகேடியர் ஹொகான் குணவர்த்தன சமீபத்தில் மட்டக்களப்பு சாரதா படமாளிகையில் விவசாயிகளின் மத்தியில் இடம்பெற்ற கூட்டத்தின் போது தெரிவித்தார்.

அப்பகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட இருப்பதால் விவசாயிகள் அங்கு நட

(6ஆம் பக்கம் பார்க்க)

"எமது போராட்டப் பாதை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமைய வேண்டுமென தீர்மானிக்க வேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே."

-திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(இ-7435)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் துறைமுகத்தை மையமாக கொண்டே வருகிறது இத்துறைமுகத்தை விஸ்தரித்து நவீன வசதிகளுடன் கூடிய கடற்படைத்தள படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

[6ஆம் பக்கம் பார்க்க]

# சிங்கள தீவிரவாத குழுவினர் ராணுவத்தினுள் ஊடுருவல்!

## புதிய ஆட்சேர்ப்பு முறையால் நெருக்கடி

(கொழும்பு)

புதிதாக இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் தளர்ச்சியான நடைமுறை புதிய பிரச்சினையை உருவாக்கியுள்ளது. இராணுவ ஆட்சேர்ப்பின் போது அவர்கள் தொடர்பாக முழு விபரங்களும் பெறப்படாமல் சேர்க்கப்படுவதினால், தெற்கில் இயங்கும் சில பயங்கரவாத குழுக்களைச் சேர்ந்த அங்கத்தினர்பலர் இராணுவ பயிற்சி பெற்று வருவதாகவும் இவர்கள் மீண்டும் 'பயங்கரவாத' நடவடிக்கைகளில் ஈடுபடும் அறிகுறிகள் தென்படுவதாகவும் தெரியவருகின்றது.

இதுதொடர்பாக கொழும்பு குற்றப் புலன் விசாரணைப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஏ. டபிள்யூ ஜயசூரிய பி. பி ஸியின் சிங்கள சேவை

[6ஆம் பக்கம் பார்க்க]

# வெட்டுப்புள்ளியை கவனியாது மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்குக

## யாழ். பல்கலை. மூதவை கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

1992-93 புதிய கல்வியாண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மருத்துவ பீடத்திற்கு மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது குறித்தும், கடந்த காலங்களில் மாணவர்கள் எவ்வளவு தொகையினர் அனுமதிக்கப்பட்டனரோ அவ்வளவு தொகையினர் இப் புதிய கல்வியாண்டிலும் அனுமதிக்க வேண்டும் என கோரும் தீர்மானம் ஒன்றை யாழ். பல்கலைக்கழக மூதவை நேற்று முன்தினம் அவசர அவசரமாக எடுத்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் அடங்கிய விபரப்பட்டியலை உயர்கல்வி அமைச்சருக்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கும்நேரில்கையளிக்கயாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன்

[6ஆம் பக்கம் பார்க்க]

## பாராளுமன்ற தெரிவுக்குழு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மங்கள முனசிங்க தலைமையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு நேற்று தனது பணியை முடித்துக்கொண்டுவிட்டதாக அறிவித்தது. மூன்று வருடங்களுக்கு முன் 43 பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்ட இத் தெரிவுக்குழு தனது இறுதியான உத்தியோகபூர்வ அறிக்கையை அடுத்தமாதம் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தெரிவுக்குழுவின் இறுதிக் கூட்டத்தில் 20 எம்.பிகள் மட்டுமே கலந்து கொண்டனர். வடக்கு கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைக்க தெரிவுக்குழு முன்னதாக மறுத்ததை அடுத்து இதிலிருந்து தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் வெளியேறிவிட்டமை தெரிந்ததே.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் ஊர்திப் பதிவு ஆறாம் கட்டம் ஆரம்பம்

மோட்டார் ஊர்திப் பதிவின் ஆறாம் கட்டம்20-09-93 தொடக்கம் ஆரம்பித்திருப்பதாக மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத் தருகின்றனர்.

வடமராட்சி அரச அதிபர் பிரிவுகளான கரவெட்டி, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு பிரிவுகளையும், தென்மராட்சி அரச அதிபர் பிரிவினையும், பளைப் பகுதியையும் சேர்ந்த மோட்டார் ஊர்திகளின் உரிமையாளர்கள் தமது மோட்டார் ஊர்திகளிற்கான பதிவுகளை மட்டும் கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் கிழமை நாட்களில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 3-30 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 8-30 மணி

[6ஆம் பக்கம் பார்க்க]

[வவுனியா]

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தின் ஷெல் பிரயோகத்தின் போது காயமடைந்த இரு தமிழ்ப் பெண்களும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரிய கிளா [52], தாசினா அம்மா [27] ஆகிய இருவருமே காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## மூதூரில் இராணுவத்தால் தபால் ஊழியர் கைது

மூதூர் நாவலடி சிறிலங்கா இராணுவத்தினர் தபால் ஊழியரான குடும்பஸ்தர் ஒருவரைக் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி திருமலையிலுள்ளமேற்படி முகாம பகுதியால் சென்று கொண்டிருந்தபோது கட்டைப் பறிச்சானைத் சேர்ந்த இருபிள்ளைகளின் தந்தையான வீரசிங்கம் ரவிச்சந்திரன் (வயது 34)என்பவரையே இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

## கடந்த 10 நாட்களில் 24 பேர் கொலராவால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த 10நாட்களில் 24பேர் மட்டுமே வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் இருவர் மரணம் அடைந்ததாகவும் யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 13ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரையிலான மேறபடி காலப்பகுதியில் இந் நோயாளர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இதில் யாழ். மாநகரசபை சுகாதார அத்தியட்சகர் பிரிவில் 7பேர் கோப்பாய் சுகாதார அத்தியட்சகர் பிரிவில் இருபாலையில் ஒருவர், சாவச்சேரி சுகாதார அத்தியட்சகர் பிரிவில் நாவற்குழி, டயர் முகாமில் 14பேர் மானிப்பாய் அத்தியட்சகர் பிரிவு நவாலி கட்டுடைப் பகுதியில் இருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்,

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்பொதுவாகவாந்திபேதி நோய் பரவினால் ஒரு

[6ஆம் பக்கம் பார்க்க]

# திலீபன் நினைவு நிகழ்வுகள் மக்கள் பெருமளவு பங்கேற்பு

[யாழ்ப்பாணம்]

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை யொட்டி தியாக திலீபனுக்கு யாழ். குடாநாடு முழுவதும் தினசரி இதய பூர்வமான அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலான அஞ்சலிநிகழ்வுகள்தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளில் அதிகளவு மக்கள் மிகவும் ஆர்வத்துடனும் உணர்வுபூர்வமாகவும் பங்குபற்றி வருகின்றனர்.

வட்டப்பிரிவு ரீதியாகவும் கோட்டமட்டத்திலும் தியாகி திலீபனின் நினைவாக அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும், சிரமதானப் பணிகளும் தினசரி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிகழ்வுகளிலும் பெருமளவு பொது மக்கள் ஆண், பெண் வயது வேறுபாடு இன்றி ஆர்வத்துடன் கலந்து கொண்டு வருகின்றனர். இவ்வாறு நடைபெற்று வரும் உண்ணாவிரதப் பந்தல்களில் தியாகி திலீபனை நினைவு கூரும் வகையிலான அஞ்சலி உரைகள் இடம்பெற்று வருகிறன. அத்துடன் தமிழீழ தேசியத்தையும், போராட்ட உணர்

[6ஆம் பக்கம் பார்க்க]

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம் சிரமதானம்

தியாகி லெப்டினன்ட்கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவை முன்னிட்டு வட்ட ரீதியாக பின்வரும் இடங்களில் நாளை உண்ணாவிரதங்கள் நடைபெறவுள்ளன.

சங்கானைவட்டம்சங்கானை அரசடி வைரவர் கோயில் முன்றல், மூளாய் சித்ரூர் மக்கள்; கோப்பாய் வட்டம் நீர்வேலி வாய்க்காற் தரவைப் பிள்ளையார் கோவில்முன்றல், கோப்பாய் உரும்பராய் மக்கள்; சண்டிலிப்பாய் வட்டம், ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றல், ஆனைக்கோட்டை சித்ரூர் முகாம் மக்கள்; உடுவில் - தெல்லிப்பழை வட்டம், சுன்னாகம் சிவன் கோயில் முன்றல், உடுவில் முகாம் மக்கள் பேக்கரிஉரிமையாளர்கள்; யாழ்ப்பாணம் வட்டம், நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதி, தச்சுத் தொழிலாளர் சங்கம்; நல்லூர் வட்டம். நல்லூர்கந்தசாமி கோயில் வீதி; சுருட்டு உற்பத்தியாளரும் நல்லூர் மக்களும்; கரவெட்டிவட்டம், நெல்லியடிகிழக்கு சாமியன் அரசடி, ப.நோ.கூ.ச ஊழியர்கள்; உடுப்பிட்டி வட்டம, உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி. உடுப்பிட்டி இமையாணன் மேற்கு சித்ரூர் மக்கள்; பருத்தித்துறை வட்டம், அல்வாய் முத்துமாரியம்மன் கோயிலடி துன்னாலை வடக்கு, வல்லிபுரம்; பளைவட்டம், பளைபிரதேசசபை முன், வண்ணாங்கேணிமக்கள், தனியார் கல்வி நிலையங்கள். முகாவில் அ.த.க பாடசாலை சோரன்பற்று கணேசா வித்தியாலயம்; கொடிகாமம் வட்டம் புகையிரத நிலைய அருகாமை. புலவேலி ச.ச.நி

[2ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

ஆங்கில வைத்திய நிலையத்திற்கு பெண் தாதிமாரும், பெண் உதவியாளரும் தேவை. வேலை பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். பே/பா 200, C/O ஈழநாதம். (6062)

### பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியராக பயிற்சி பெற குறைந்த தகைமை க.பொ.த(சா த)தகைமையுடையோர் தபாலிலும் கற்கலாம் பாலர் ஆசிரியர் சங்கம் 'உயர் கலைக்கல்லூரி-73 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (5955)

### சேவைக்கால கருத்தரங்கு

யாழ் கல்வித்திணைக்கள தொழில் நுட்பப்பிரிவினர் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் ''வாழ்க்கைத் திறன்'' கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்றும் நாளையும் மறுதினமும் காலை 8.30 முதல் 4.30 மணி வரை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

### திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் அரச போதனா வைத்திய சாலை ஆரோக்கிய அன்னை (வேளாங்கண்ணி மாதா) சிற்றாலய விழா இன்று, நாளை நாளை மறுதினம் மாலை 5.15 மணிக்கு நடைபெறவுள்ளது, அவ்வேளை திருப்பலியும் விசேட ஆராதனையும் இடம்பெறவுள்ளன.

### வீதிகள் திருத்த வேலைகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணிப்புரி கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகத்தினரின் விடா முயற்சியால் கொழும்புத்துறை மணிப்புரி பிரதான வீதி, மணிப்புரி மத்திய வீதி, மணிப்புரி உதயபுரம் வீதி ஆகிய ஆறுமைல் நீளமான மேற்படி வீதிகள் மிக விரைவில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக நிலையத்தலை

## உவர் நிலத்தில் நெற்செய்கை பரீட்சார்த்த முயற்சி

உவர் நிலப் பிரதேசத்தில் முதன் முதலாக பரீட்சார்த்த முறையில் நெற்பயிர்ச் செய்கை ஒன்றினை கோப்பாய் பிரதேச செயலர் இன்று அறிமுகப்படுத்தவுள்ளார்.

கோப்பாய் வடக்கு கோட்டை வாய்க்கால் ஒழுங்கையில் கிழக்குப் புறமாய் உள்ளடக்கப்படுத்தப்பட்ட தரைவையில் இப் பயிர்ச்செய்கை 2 ஏக்கர் நிலத்தில் செய்யப் பெற்ற மாதிரி நிலத்தை மூன்று பிரிவாகப் பிரித்து, உவர் நிலத்தில் பயிரிடக்கூடிய நான்கு நெல் இனங்களை அரை ஏக்கருக்கு ஒரு இனம் என்றவாறு விதைக்கப்படவுள்ளது.

இப் பிரதேசத்தில் இவ்வாறான உவர் நிலம் 500 ஏக்கர் உள்ளது. இந் நிலத்திலுள்ள மண்ணை இரண்டு வாரத்துக்கு ஒரு முறை வவுனியா, பேராதனையில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றதெனவும் உவர் நீரை (கடல் நீரை) இப் பிரதேசத்துக்குள் வராதவாறு முதல் நடவடிக்கையாக 30 ஆயிரம் ரூபா செலவில் துருசுகள் திருத்தியமைக்கப்பட்டும் அணை ஒன்றும் புதிதாக கட்டப்பட்டுள்ளது. இதற்கான நிதியை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு பிரமாண அடிப்படை முதலீட்டு நிதியிலிருந்து ஒதுக்கியிருந்ததாக தெரிய வருகின்றது.

மேற்படி உவர் நில நெல் மாதிரிச் செய்கை விதைப்பு நாள் விழாவை இன்று காலை 9.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் திரு.இ. இளங்கோவன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (சி) (பா)

## இராணுவ முகாம் பகுதியில் தமிழிளைஞர் ஒருவர் கைது

(திருமலை)

திருமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவமுகாம் அருகாக சென்று கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதியன்று திருமலையிலுள்ள நாவலடிச் சந்தி இராணுவமுகாமைத் தாண்டிச் செல்லும் போதே அம்முகாம் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த குணரட்ணம் நாகராஜா (வயது 22) எனத்தெரிய வந்துள்ளது.

## கிராமோதய சபைத்தலைவர் சடலமாக மீட்பு

மூதூர் சேனையூர் பகுதியைச் சேர்ந்த வைரமுத்து கயிலாயபிள்ளை (வயது 50) என்பவரின் சடலம் திருக்கோணமலை பெரிய கடைப் பகுதியிலுள்ள கடற்கரையோரத்தில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர் சேனையூர் பகுதி கிராமோதய சபைத் தலைவராக முன்பு கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சடலத்தை பரிசோதனை செய்யும்படி உத்தரவிட்ட திருக்கோணமலை மாவட்ட நீதிவான் சாட்சிகளைத் தமது முன்னிலையில் ஆஜர் செய்யும்படியும் பணித்துள்ளார். மூன்று நாள் பிற்பகலில் தமது வீட்டிலிருந்து சைக்கிளில் சென்ற கயிலாயபிள்ளை பின்னர் வீடு திரும்பவில்லை என்று அவரது மனைவி தெரிவித்தார்.

## தீவுப் பகுதிகளுக்கு சென்றோர் இராணுவ அனுமதியின்றி திரும்பினர்

இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட தீவுப் பகுதிகளுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் தமது உறவினர்களிடம் செல்லவிருந்த சுமார் நாற்பது பேர் இறுதி நேரத்தில் பயணத்தைக் கைவிட வேண்டியதாயிற்று, தீவுப் பகுதிகளுக்கு செல்வதற்காக பருத்தித்துறைக்கு சென்ற இவர்களுக்கு தீவுப்பகுதி இராணுவத்தினர் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்தே இவர்கள் திரும்ப நேரிட்டதாகத் தெரிய வருகிறது.

இராணுவதரப்பினர் முன்பு அனுமதி வழங்கியிருந்த போதிலும், இறுதி நேரத்தில் இராணுவத்தினர் அனுமதியை ரத்துச் செய்தமையினாலேயே இவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்ப நேரிட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி) (க)

## பிரிட்டிஷ் கவுன்சிலில்

தியாகி திலீபன்

இயற்றாலை கொடிகாமம் தெற்கு, அல்லாரை அரச த.க பாடசாலை, மிடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்; சாவகச்சேரி வட்டம், மணங்குணாப் பிள்ளையார் கோயில் முன்றல், கோவிற் குடியிருப்பு, சரசாலை வடக்கு, கல்வயல், மட்டுவில் தெற்கு மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், பிரதேசசபை கைதடி, நுணாவில் அ.த.க பாடசாலை; கைதடி வட்டம், கைதடிச் சந்திக்கு அண்மையில் நாவற்குழி சிற்றூர், அப்பன் குடியேற்றத்திட்டம், மாதர்சங்கம், பக்திவீதி; தீவகக்கோட்டம், நல்லூர் கோயில் முன்றல் புங்குடுதீவு சித்திவிநாயகர், ஆனைப்பந்தி பாடசாலை, நக்கீரன் குடியிருப்பு, மண்கும்பான் பாடசாலை.

### கலந்து கொள்ளும் பாடசாலைகள்

புங்குடுதீவு ஸ்ரீசித்திவிநாயகர் மகாவித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், புங்குடுதீவு குறிகட்டுவான் வித்தியாலயம், எடுதிடல் அ.த.க பாடசாலை, சேதுகாவலர் வித்தியாலயம், கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை, சாவகச்சேரி சக்தியம்மன் த.க. பாடசாலை, மீசாலை - விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மிடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம், நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், அல்லாரை அ.த.க பாடசாலை சோரன்பற்று கணேசா வித்தியாலயம், முகாவில் அ.த.க பாடசாலை, மாதனை மெ.மி.த.க. பாடசாலை, தாமோதர வித்தியாலயம், நெல்லியடி ம.ம கல்லூரி, கட்டைவேலி மெ.மி.த.க பாடசாலை, கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை வைத்தீஸ்வரா கல்லூரி, கண்டிக்குளி மகளிர் கல்லூரி, புனிதஜேம்ஸ் ம.வி., காசிப்பிள்ளை வித்தி, நல்லூர் ஆனந்தா வித்தி., புனித பெனடிக்ற் றோ.க.த.க பாடசாலை, பூம்புகார் நித்தியா கல்விக்கூடம், பண்ணாகம் அமி.த.க. பாடசாலை, காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை, சுப்பிரமணியம் வித்தியாலய சைவ வித்தி. மாதகல் றோ.க.. மாவிட்டபுரம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை, பவானி சித்தி விநாயகர் வித்தி., இடைக்காடு மகா வித்தி., அச்சுவேலி சென் திரேசா., அச்சுவேலி சரஸ்வதி, அச்சுவேலி சிறிவிபசி, அச்சுவேலி வடக்கு றோ.க.த., கதிரிப்பாய் சுப்பிரமணியம், பத்தமேனி இராஜேஸ்வரி, தோப்பு அருள், வளலாய் அ.மி.த., வயாவிளான் ம.ம.வித்தியாலயம், புன்னாலைக்கட்டுவன் ம.ம. வித்தி, ஈவினை றோ.க.த.க, புன்னாலைக் கட்டுவன் அ.த.க, குட்டியப்புலம் றோ.க, வயாவிளான் றோ.க.த., வயாவிளான் சிற. வேலுத்தம்பி நவாலி ஸ்ரேசன்

### சிரமதானப் பணிகள்

நாளை பின்வரும் இடங்களில் சிரமதானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. கோப்பாய் வட்டம் உரும்பராய் கோகணை குடியேற்றத்திட்டம் துப்புரவு, உடுவில் தெல்லிப்பளை வட்டம் அளவெட்டி நீலியம்பனை வீதி துப்புரவு தீந்தமிழ் ச.ச.நி. முற்போக்கு வாலிபர் சங்கம், கரவெட்டி வட்டம், நாவல் மடம் மாவிச்சந்தி பிரதான வீதி, மாவீரர் தூபிகள் துப்புரவு பாடசாலை மாணவர்கள் இருதைய ச.ச.நி உறுப்பினர், தீவகக்கோட்டம், டயஸ் குடியிருப்பு தெருமேம்பாடு திருத்தல்.


## சுன்னாகம் வர்த்தகர் சங்கம் முக்கிய அறிவித்தல்

தியாகி லெப். கேணல் திலீபனின் 6 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளை முன்னெடுக்க சுன்னாகம் வர்த்தகர் சங்கம், ஊழியர் சங்கம் [25 9 93] சனிக்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை நடத்துகின்றது அன்றைய தினம் உடுவில் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல துறை வர்த்தகர்களும் ஸ்தாபனங்களை மூடி தமது ஊழியர்கள் சகிதம் காலை 7 00 மணியளவில் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் முகமாக வர்த்தக சங்க காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

குறிப்பு: இன்றைய தினம் காலை 9 00 மணி முதல் சுன்னாகம் பகுதியில் சிரமதானம நடைபெறவுள்ளது.

-ஊழியர் சங்கம் / வர்த்தகர் சங்கம்
சுன்னாகம

சி/7467



தென்மராட்சி

## தனியார் கல்வி நிறுவனங்களுக்கு

இன்று [23 09-93] பி ப. 2.30 மணிக்கு யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் தியாக தீபம் திலீபனின் 6ஆவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் தென்மராட்சி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படவுள்ளது சகல தனியார் கல்வி நிறுவனங்களும் அன்றைய மாலை வகுப்புக்களை நிறுத்தி இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

த. நாகேஸ்வரன் — தலைவர்
க தர்மராசா — செயலாளர்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
தென்மராட்சி.

(6076)


## நினைவு கூருகின்றோம் ... 1993-09-23

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு. ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இரகசிய காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**பாண்டியன்** [முத்தன் நல்லதம்பி - அம்பிளாந்துறை, தாழங்குடா - மட்டு]

1986ஆம் ஆண்டு திருமலை - கும்புறுபிட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

**ஐயா** [ —— —— கும்புறுப்பிட்டி - திருமலை]

1987ஆம் ஆண்டு உண்ணாவிரதம் இருந்த திலீபனின் கோரிக்கையை வலியுறுத்தி மன்னார் எழுத்தூரில் இருந்து இந்தியப் படைமுகாமிற்கு மகஜர் கொடுக்கச் சென்ற சமயம் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**யோகன்** [சவரிப்பிள்ளை யோகரத்தினம் - இத்திக்கண்டல், அடம்பன் - மன்னார்]

1988ஆம் ஆண்டு வவுனியா கல்மடுவில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த -

**றொயிஸ்** [குமராசா சரவணபவன் - மூன்றுமுறிப்பு - வவுனியா]

1989ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**ரஞ்சன்** [க. சத்தியசீலன் - வாழைச்சேனை - மட்டு]

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் தலைகள் கொய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டு பின் முண்டங்களாக மீட்கப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான -

**தர்மகுலேந்திரன்** [இயக்கச்சி]

**நமசிவாயம் தெய்வேந்திரன்** [வேலணை]

**நாகநாதன் பாலேந்திரா** [இராஜேந்திரா வீதி - யாழ்ப்பாணம்]

1990ஆம் ஆண்டு மட்டு மியாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சோழன்** [— —— ஐயங்கேணி ஏறாவூர் - மட்டு]

யாழ் - வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய -

**மொசாட்/காந்தன்** [மகேந்திரராஜா ஜெயகாந்தன் - 2-ம் வட்டாரம் - புதுக்குடியிருப்பு]

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின

நாயைய விழா இன்று. நாளை நாளைமறுதினம் மாலை 5.15 மணிக்கு நடைபெறவுள்ளது. அவ்வேளை திருப்பலியும் விசேட ஆராதனையும் இடம் பெறவுள்ளன.

## வீதிகள் திருத்த வேலைகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணிப்புரி கலைமகள் சனசமூக நிலைய நிர்வாகத்தினரின் விடா முயற்சியால் கொழும்புத்துறை மணிப்புரி பிரதான வீதி, மணிப்புரி மத்திய வீதி, மணிப்புரி உதயபுரம் வீதி ஆகிய ஆறுமைல் நீளமான மோட்டார் வீதிகள் மிக விரைவில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக நிலையத்தலைவர் திரு டி. பி. இமானுவேல் தெரிவித்துள்ளார். (24)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளிவாரிக் கற்கைநெறி பதிவுகள்

1992/1993

கல்வியாண்டு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கைநெறிகளான கலைமுதல், வர்த்தக முதல், வர்த்தகமாணி பகுதி 1 பொதுக் கலைமாணிப்பகுதி 1 ஆகியவற்றிற்குப் பதிவு செய்த மாணவர்களுக்குரிய பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் தலைமையில் பிரவேச வரவேற்பு நிகழ்ச்சி எதிர்வரும் 02-10-93 சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு இடம்பெறும்.

பதிவு செய்த அனைத்து மாணவர்களும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,

(சி/7474)

சேனையூர் பகுதி கிராமோதய சபைத் தலைவராக முன்பு கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சைக்கிளில் சென்ற சுயிலாய பிள்ளை பின்னர் வீடு திரும்பவில்லை என்று அவரது மனைவி தெரிவித்தார்.

## தீவுப் பகுதிகளுக்கு சென்றோர் இராணுவ அனுமதியின்றி திரும்பினர்

இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட தீவுப் பகுதிகளுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் தமது உறவினர்களிடம் சென்றிருந்த சுமார் நாற்பது பேர் இறுதி நேரத்தில் பயணத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. தீவுப் பகுதிகளுக்கு செல்வதற்காக பருத்தித்துறைக்கு சென்ற இவர்களுக்கு தீவுப்பகுதி இராணுவத்தினர் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்தே இவர்கள் திரும்ப நேரிட்டதாகத் தெரிய வருகிறது.

இராணுவதரப்பினர் முன்பு அனுமதி வழங்கியிருந்த போதிலும், இறுதி நேரத்தில் இராணுவத்தினர் அனுமதி மறுத்துச் செய்தமையினாலேயே இவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்ப நேரிட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(நி) (க)

## பிரிட்டிஷ் கவுன்சிலில் குண்டுப் புரளி!

[கொழும்பு]

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் கவுன்ஸிலில் குண்டுவைக்கப்பட்டுள்ளதாக அநாமதேய பேர்வழி ஒருவர் தொலைபேசி மூலம் அறிவித்ததைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை பிற்பகல் பிரிட்டிஷ் கவுன்சில் அல்லோலகல்லோலத்திற்குள்ளானது.

தகவலறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் அங்கிருந்தவர்களை அவசர அவசரமாக வெளியேற்றிய பின் குண்டைச் செயலிழக்கச் செய்யும் குழுவினர் வரவழைக்கப்பட்டு கட்டடம் முழுவதும் சோதனையிடப்பட்டது.

இறுதியில் அங்கு எதுவித தடயமும் கிடைக்கவில்லை என பிரிட்டிஷ் கவுன்சில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வடபகுதி வந்த பொதுமக்கள் நொச்சிமோட்டையில் தடுப்பு

வடபகுதி நோக்கி வந்த பொது மக்கள் நொச்சிமோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினரால் 30 நிமிடங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னரே பயணத்தை தொடர அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று நண்பகல் இரு கனரக வாகனங்கள் சகிதம் நொச்சிமோட்டைப் பாதைத் தடிக்கு வந்த 150ற்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரே வெளியிடங்களிலிருந்து வடபகுதி நோக்கி வந்த பொது மக்களை 30 நிமிடங்கள் தடுத்து வைத்திருந்த பின் வடபகுதிக்குள் செல்ல அனுமதித்தனர்.

இதேவேளை சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று பலதடவைகள் வட்டமிட்டு சோதனை நிலையப் பகுதியை நோட்டமிட்டுச் சென்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இந்திய விசா வழங்க புதிய நடைமுறை

[கொழும்பு]

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரகம் இந்தியா செல்வோருக்கான விசா வழங்குவதற்கு புதிய நடைமுறைகளை அறிவித்துள்ளது. இதன்படி அலுவலக நேரத்தில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இந்திய தூதுவரகத்திற்கு சென்று திகதியொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்ட அத்திகதியிலேயே விண்ணப்பம் பெறப்பட்டு பரிசீலிக்கபபட்டு விசா வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. எனினும் வர்த்தக விசா பெறுபவர்களும், மாணவர்களும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளச் செல்வோரும் தத்தமது விண்ணப்பங்களை முன்அறிவித்தலின்றி கொடுத்து விசா பெற்றுக் கொள்ளலாம் என்றும் அலுவலக நேரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முக்கிய அறிவித்தல்

தியாகி லெப். கேணல் திலீபனின் 6 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளை முன்னெடுக்க சுன்னாகம் வர்த்தகர் சங்கம், ஊழியர் சங்கம் [25 9 93] சனிக்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை நடத்துகின்றது அன்றைய தினம் உடுவில் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல துறை வர்த்தகர்களும் ஸ்தாபனங்களை மூடி தமது ஊழியர்கள் சகிதம் காலை 7 00 மணியளவில் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளுமுகமாக வர்த்தக சங்க காரியாலயத்திற்கு சமூகம் தரவும்.

குறிப்பு: இன்றைய தினம் காலை 9 00 மணி முதல் சுன்னாகம் பகுதியில் சிரமதானம் நடைபெறவுள்ளது.

-ஊழியர் சங்கம் / வர்த்தகர் சங்கம்
சுன்னாகம

சி/7467

## 31-ம் நாள் நினைவு



### 2-ம் லெப். அசோக்/கலாமன்

(மாணிக்கவாசகம் சுதாகரன்)
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 02 07.1970 | 23.08 1993 |

சத்தியத்தின் புத்திரர்கள் வரிசையில்
நீர் ஓர் சத்தியப்புயல் - வீரனே
உன் சந்ததியை வாழவைக்க வேள்வி விளக்கேற்றி
இங்கு ஒரு அணியோடு படைகொண்டாய்

மறவர் படையணியின் வீரன்
உனது மற போர் யுத்திகண்டு
உன்மண்ணில் தடம் பதித்த
மடையர்கள் மதிகெட்டு ஓ வைத்த
உன்வீரத்தை உன்பின்னணியில்
கொலுவிருந்த சிறுத்தைகளும் மறந்திடுமா

நெஞ்சில் உரமில்லா வஞ்சகர்கள்
உன் முன்னால் வரப்பயந்து
புறமுதுகில் குத்திவிட்டார்- அதனால்தான்
உனுறுதியான சுவடுகளை தன்
நெஞ்சில் பதித்து பெருமிதம் கொண்ட
காடுகள் மேடுகள், மலைகள், புற்கள் கூட

இன்று தங்கள் சோபை இழந்ததோ
சத்தியம் சத்தியம்- உன்
வேதத்தை வேள்வியாய்க் கொண்ட
சிறுத்தைகள் யாகத்தை தொடங்கிவிட்டனர்

(சி-7472) —குடும்பத்தினர்

வவுனியா]

1989ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**ரஞ்சன்** [க. சத்தியசீலன் - வாழைச்சேனை - மட்டு]

இதேஆண்டு தேசவிரோத சக்திகளினால் தலைகள் கொய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வீதியில் முண்டங்களாக மீட்கப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான –

**தர்மகுலேந்திரன்** [வியக்கச்சி]

**நமசிவாயம தெய்வேந்திரன்** [வேலணை]

**நாகநாதன் பாலேந்திரா** [இராஜேந்திரா வீதி - யாழ்ப்பாணம்]

1990ஆம் ஆண்டு மட்டு மியாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சோழன்** [ — —— ஐயங்கேணி ஏறாவூர் - மட்டு]

யாழ் - வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய -

**மொசாட்/காந்தன்** [மகேந்திரராஜா ஜெயகாந்தன் - 2-ம் வட்டாரம்- புதுக்குடியிருப்பு]

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நிவாஸ்** [குமாரசாமி கணேஷ் - கொம்மாந்துறை - மட்டு]

**ரமணிதரன்** [ —— —— மட்டு]

**லெப். கேணல் சந்திரன்** [இராமலிங்கம் முத்துலிங்கம் - 4-ம் வாய்க்கால் - கிளிநொச்சி]

**கடற்புலி மேஜர் வின்சன்/ஜப்பான்** [நவரத்தினம் வசந்தன் - நுணுவிலடி - வல்வெட்டித்துறை]

**மேஜர் அரவிந்தன்** [சிவலிங்கம் தவானந்தராசா - ஊறணிகுடியேற்றம், பொலிகண்டி - யாழ்]

**நரேன்** (இரத்தினசிங்கம் தங்கரூபன் - இன்பருட்டி, அல்வாய் வடமத்தி - பருத்தித்துறை)

**நுட்வின்** ( — — )
**அலிஸ்** ( — — )
**சைமன்** ( — — )
**கோமேஸ்** ( — — )

அம்பாறை - திருக்கோயில் முகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்து சுட்டுக் கொலைப்பட்ட தமிழிளைஞர்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடி 02 ஐயங்கேணிப் பகுதிகளைச் சேர்ந்த 02 தமிழிளைஞர்கள்

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**ரஜந்தன்** (ஆறுமுகம் செல்வரட்ணம் - வட்டுவாகல் முல்லைத்தீவு)

**கப்டன் குபேரன்** (இராமச்சந்திரன் தர்மராசா - விநாயகபுரம் - துணுக்காய்)

**2-ம் லெப். மனோஜ்** (இரத்தினம் சிவகுமார் - பன்றிக்கெய்தகுளம் - ஓமந்தை)

**2 ம் லெப் றெஜினோல்ட்** (இராமலிங்கம் பதமராசா- குமரபுரம் - பரந்தன்)

**லெப். விவேக்** (மார்க்கண்டு மகேந்திரன் - கரவெட்டி மத்தி - யாழ்)

**2 ம் லெப். ரூபி** (செல்வராணி தம்பையா - வரணி, கொடிகாமம் - யாழ்)

**மலேசியன்** (இராஜேந்திரம் திவாகரன், கரணவாய் மேற்கு, கரவெட்டி - யாழ்)

யாழ் - சில்லாலைப்பகுதியில் தோட்டத்திற்கு சென்ற சமயம் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான ஒரு விவசாயி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7463]

பொது நூலகம்
மாநகராட்சி மன்று
22-9-1993
யாழ்ப்பாணம்

# அனுரா மீதான தடையை அரசு நீக்குவதற்கு முயற்சி

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்காவுக்கு விதித்துள்ள கட்சித் தடையை நீக்கி தற்போது தடைசெய்யப்பட்டுள்ள ஏனையவர்களுக்கும் மன்னிப்பு வழங்கி கட்சியை ஐக்கியப்படுத்தும் முயற்சிகள் இன்னும் இரண்டு வாரங்களில்' நடைபெறவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சியின் புதிய புனரமைப்பின் கீழ் இந்நடவடிக்கையை எடுத்து கட்சியை பலப்படுத்துவதாக சுதந்திரக் கட்சிப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனுராவுக்கு கட்சி தடை விதித்த போதும் அவருக்கெதிராக எந்தவிதமான குற்றப்பத்திரமும் இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாப்பதாகும்.


சமுத்துறைஎம்.பி.திலக்கருணரத்னாவின் நீதிமன்றவழுமீதான தீர்ப்பைப் பார்க்கும்பட்சத்தில் கட்சித் தடைகள் நீடிப்பதில் பயனில்லை என்று கட்சியின் முக்கிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## சர்வோதய ஆண்டுவிழா

(தொல்புரம்)

தேசிய சர்வோதய கிராமதான இயக்கத்தினது சங்கானை பிரதேசநிலைய ஆண்டு விழாவும் தையல்கண்காட்சியும் அண்மையில் சங்கானைப் பிரதேச இணைப்பாளர் செல்வி இ யோகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் சங்கானை உதவி அரசாங்கஅதிபர்செல்விரூபினி கனகரெத்தினம் முதன்மை விருந்தினராகவும் சர்வோதய முத்த அதிகாரிகள்பாடசாலை அதிபர்கள் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் சங்கானை காவற்துறை உபபொறுப்பாளர் கிராம சேவையாளர்கள் மற்றும் பலர்சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர் நிகழ்வின் சிறப்பு நிகழ்ச்சியாக விடைவந்தபோது எனும் சமூகநாடகமும் வில்லிசையும் தேசிய சர்வோதய தொண்டர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.(41)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
27. 12. 1975

தாயக மண்ணில்
23. 09. 1991

### வீரவேங்கை மலேசிமன்
(இராசேந்திரம் திவாகரன்)

எங்கள் மலேசிமனே...
நீ சும்மா மடிந்திருந்தால்
அன்றே மறந்திருப்போம்!
தேசத்தின் விடிவை எண்ணி
பாசத்தை உதறித்தள்ளி
பாயும் புலியாய்
பாதகர் நெஞ்சைக் கீறிக்கிழித்து
மணலாற்று மண்ணில்
உமலாறு சமைத்த குட்டிப் புலியல்லவா நீ...
உன்னை எப்படி மறப்பது?
ஆண்டுகள் இரண்டென்ன ஆயிரம் மறைந்தாலும்
உன் நினைவு மறையாது.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்டான்
கரணவாய் மேற்கு
கரவெட்டி

இராசேந்திரம்
குடும்பத்தினர்

(6075)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 6-ம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின்
மடியில்
16-02-1955

அன்னியனின்
அழிப்பில்
23-09-1987

### சவரிப்பிள்ளை யோகரெட்ணம்
(நாட்டுப்பற்றாளர்)

அன்று நடந்த திலீபனின் சத்திய
வேள்விக்கு காப்பரணான மக்கள்
அலையில் ஆத்திரம் கொண்ட
இந்திய அரக்கத்தனத்திற்கு தமிழீழத்தில்
முதற்சாவு கொண்டாய். உடல்
அழிந்தது உணர்வுகள் என்றும்
உலா வருகின்றது வெல்லும் தமிழீழம்.
அது சொல்லும் உன் நாமம்.

இத்திக்கண்டல்,
அடம்பன்,
மன்னார்.

-குடும்பத்தினர்.

(6072)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

# யாழ்.மாவட்ட தடகளபோட்டி ஒக்டோபர் இறுதியில்

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படவுள்ள 3-வது தடகள விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே திட்டமிட்டபடி பூர்த்தியாகி உள்ளன.

மாவட்டத்திலுள்ள அனைத்து வலயங்களுக்குமான முதற்கட்ட போட்டிகள் முடிவடைந்த பின்னர் மாவட்ட மட்டத்திலான இறுதிப்போட்டிகள் மூன்று நாட்களை கொண்ட விழாவாக நடைபெறும். ஒக்டோபர் 29-ம்,30-ம், 31-ம் திகதிகளில் நடைபெறவுள்ள விழாவில் தலைசிறந்த அணிகள் பங்குகொள்ளும் கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறும். இது தவிர வலயங்களில் முதல் நான்கு இடங்களையும் பெற்ற வீர வீராங்கனைகளுக்கான தடகள போட்டிகளும் நடைபெறும்.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய வலி மேற்கு வலயத்தின் போட்டிகள் எதிர்வரும் எட்டாம் ஒன்பதாம் திகதிகளிலும்; பளை, சாவகச்சேரி பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி வலய போட்டிகள் 9-ம், 10-ம் திகதிகளிலும், வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு ஆகிய பிரிவுகளின் தீவக வலய போட்டிகள் 13-ம். 14-ம் திகதிகளிலும்; பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரிவுகளின் வடமராட்சி வலய போட்டிகள் 16-ம், 17-ம் திகதிகளிலும்; யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரிவுகளின் வலி கிழக்கு போட்டிகள் 15-ம், 16-ம் திகதிகளிலும் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளன.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்ப முடிவு திகதி 30.9.93 ஆகும். விண்ணப்பப் படிவங்களை அவ்வவ் வட்டப் பிரிவு விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் பெற்று உரிய திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து கொடுக்குமாறு அனைத்து விளையாட்டுக்கழகங்களும் வீர வீராங்கனைகளும் கேட்கப்படுகின்றனர். போட்டி நடைபெறும் இடம் பின்னர் அறியத்தரப்படும்.

## மூன்று மாதங்கள் சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட தொலைத்தொடர்புத் திணைக்களத்தைச் சேர்ந்த சகலதர ஊழியர்களுக்கும் மூன்று மாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் இன்றுவரை கிடைக்கவில்லை என இத்திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

கொழும்பில் செயல்பட்டு வரும் தலைமைச் செயலகத்துடன் பல தடவைகள் கடித

## தேநீர் கடையுடன் இணைந்து கால்நடைப் பண்ணை

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையத்துக்கு அண்மையில் உள்ள ஒரு நேநீர்க் கடையுடன் சேர்ந்தாற் போல் கால்நடைப் பண்ணை ஒன்று இருப்பதால் சுற்றாடல் பாதிக்கப்படுவதாக அடலில் வசிப்பவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கோழி, தாரா மற்றும் சுமார் பத்துக்கும் அதிகமான பெரும் இனக் கறவைப் பசுக்கள் அந்தப் பண்ணையில் வளர்க்கப்படுவதால் கழிவுப் பொருள்களால் துர்நாற்றம் வீசுவதாகவும், சுகாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அப் பகுதியினர் தெரிவிக்கிறார்கள்.

இது தொடர்பாக இந்தப் பகுதியைச் சேர்ந்த சுகாதாரக் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எழுத்தில்முறைப்பாடு செய்தும், இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த தொழுவத்தின் உரிமையாளர் பிரதான வீதியை வெட்டிக் குழாய் ஒன்றை அமைத்து வீதியோரமாகவுள்ள கால்வாயில் கால்நடைகளின் கழிவுப் பொருள்களை கலக்கவிடுவதால் கால்வாயில் இருந்தும் துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் தெரிவிக்கிறார்கள்.

## இளவாலை மாதகலுக்கு செஞ்சிலுவைபிரதிநிதிகள்

இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்டுள்ள இளவாலை மாதகல் பகுதிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இவ்வார இறுதியில் விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

மேற்படி பகுதிகளில் சிக்குண்டுள்ள மக்களின் நலன் தொடர்பாகவும் இராணுவத்தினால் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 30 பேர்களின் நலன் தொடர்பாகவும் கவனிக்க அவர்கள் அங்கு செல்லவுள்ளதாக தெரியவருகிறது. (நி) [க]

## விசேட அறிவித்தல்

### சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம்

தியாகசீலன் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நிகழ்வில் எமது அனுதாப அஞ்சலிகளைச் செலுத்தி பங்கு கொள்வதற்காக 24-09-93 வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் அமைந்திருக்கும் விசேட அரங்கத்திற்கு எமது சங்க எல்லைக்குட்பட்ட சகல துறை வர்த்தகர்களும், தமது ஸ்தாபனங்களைப் பூட்டி, பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

க. முருகேசு
செயலாளர்

(5065)

ச. நமசிவாயம்
தலைவர்

உன்னை எப்படி மறப்பது?
ஆண்டுகள் இரண்டென்ன ஆயிரம் மறைந்தாலும்
உன் நினைவு மறையாது.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இராசேந்திரம்
குடும்பத்தினர்

மண்டான்
கரணவாய் மேற்கு
கரவெட்டி. (6075)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நமசிவாயம் தெய்வேந்திரா

(நாதன்) வேலணை

அன்னை மடியில் 15-09-1958

ஆண்டவன் அழைப்பில் 22 09 1989

திதி : 23-09-1993

உரிமைக்காய் குரல் கொடுத்த - உத்தமனே
உலகமெல்லாம் போற்றுகின்ற இனியவனே
அகிலத்தையே வெல்லுகின்ற ஆற்றலோனே
அவனியிலே உனையிழந்து தவிக்கின்றோமே.

அன்பின் திருவுருவே
பண்பின் சிகரமே - எம்
அன்பிற்குரியவனே நாதா
ஆறுதில்லை எம்மனமும் ஐயா.

தேன் போன்ற மொழி பேசும் - தெய்வேந்திரா
தேவரிடம் நீயும் சென்று விட்டீரே
ஆண்டுகள்தான் நான்கு முடிந்து விட்டாலும்
ஆறிடுமோ எமது மனம் அன்பு நாதா!

உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
அம்மா, ஆசையம்மா, சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

இல. 267, நாவலர் றோட்,
ஆனைப்பந்தி. (5743)

## சவரிப்பிள்ளை யோகரெட்ணம்

(நாட்டுப்பற்றாளர்)

அன்று நடந்த திலீபனின் சத்திய
வேள்விக்கு காப்பரணான மக்கள்
அலையில் ஆத்திரம் கொண்ட
இந்திய அரக்கத்தனத்திற்கு தமிழீழத்தில்
முதற்சாவு கொண்டாய். உடல்
அழிந்தது உணர்வுகள் என்றும்
உலா வருகின்றது வெல்லும் தமிழீழம்.
அது சொல்லும் உன் நாமம்.

இத்திக்கண்டல்,
அடம்பன்,
மன்னார். (6072)

-குடும்பத்தினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



உயர் திரு.

## அருணாசலம் விவேகானந்தராஜா

(ஓய்வுபெற்ற குடியேற்ற அதிகாரி C.O.)

தோற்றம்: 11. 08. 1932

மறைவு: 03. 10 1992

திதி:23. 09. 1993

ஆண்டு ஒன்று அகன்றாலும் உங்கள் அன்பு எம்மை விட்டகலாது. உங்கள் ஆசியும் அறிவுரைகளும் இன்றும் எம்மை வழி நடத்திக் கொண்டிருக்கின்றன. தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.
[6074]

போட்டிகள் 16-ம், 17-ம் திகதிகளிலும்; யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரிவுகளின் வலி கிழக்கு போட்டி

## மூன்று மாதங்கள் சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட தொலைத் தொடர்புத் திணைக்களத்தைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் மூன்று மாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் இன்றுவரை கிடைக்கவில்லை என இத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

கொழும்பில் செயல்பட்டு வரும் தலைமைச் செயலகத்துடன் பல தடவைகள் கடித மூலம் தொடர்புகள் கொண்டும் இன்றுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை என ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (24)

## பிரியாவிடை

(நெல்லியடி)

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் பகுதித் தலைவரான திரு.ஜே. எஸ். கிறிஸ்ததாஸ் அவர்களின் பிரியாவிடை வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. (30)

## பெண்மணி ஒருவர் இராணுவத்தால் கைது

(வவுனியா)

வடபகுதி நோக்கி வந்த பெண் ஒருவரை வவுனியாவில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

திருமலையில் இருந்து வடபகுதி நோக்கி வந்த சுமந்திஎன்பவரையே வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்ததாக தெரியவருகிறது.

## லங்கா சீமெந்து கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களுக்கான ஆனி. ஆடி மற்றும் ஆவணி மாதங்களிற்கான சம்பளக் கொடுப்பனவுகள் நேற்று தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

இக் கொடுப்பனவினை சுன்னாகத்தில் உள்ள மேற்படி நிறுவனத்தின் தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சீமெந்து நிறுவன கணக்காளர் சி. பாலசிங்கம் அறிவித்துள்ளார். [பா]

## விசேட அறிவித்தல்

### சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம்

தியாகசீலன் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நிகழ்வில் எமது அனுதாப அஞ்சலிகளைச் செலுத்தி பங்கு கொள்வதற்காக 24-09-93 வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் அமைந்திருக்கும் விசேட அரங்கத்திற்கு எமது சங்க எல்லைக்குட்பட்ட சகல துறை வர்த்தகர்களும், தமது ஸ்தாபனங்களைப் பூட்டி, பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

க. முருகேசு
செயலாளர்

(5065)

ச. நமசிவாயம்
தலைவர்

## கேள்விவிண்ணப்பம் கோரல்

## யாழ். பல்கலைக்கழகம்

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை/மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் போதனா வைத்தியசாலை / கைதடி வயோதிபர் இல்லம் ஆகியவற்றால் யாழ். பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்படும் உரிமை கோரப்படாத பிரேதங்களை யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவபீடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும், யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து பிரேத கழிவு உறுப்புக்களை அகற்றுவதற்கும் அழிப்பதற்கும் தகுதி உடையவர்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன. கூறு விலைகள் ஐப்பசி மாதம் 1-ம் திகதி 10. 30 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நிதியாளர் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் திறக்கப்படும் நேரம் ஐப்பசி மாதம் 1-ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு. கேள்வி விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் UJ/F/S2/10/91 என்ற இலக்கம் குறிப்பிடல் வேண்டும்.

கூறுவிலைகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்:

1. யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் இருந்து திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு உரிமைகோரப்படாத பிரேதம் ஒன்றை எடுத்துச் செல்வதற்கான கட்டணம்.
2. மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் போதனா வைத்தியசாலையில் இருந்து திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு உரிமை கோரப்படாத பிரேதம் ஒன்றை எடுத்துச் செல்வதற்கான கட்டணம்.
3. கைதடி வயோதிபர் இல்லத்திலிருந்து திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு உரிமை கோரப்படாத பிரேதம் ஒன்றை எடுத்துச் செல்வதற்கான கட்டணம்.
4. திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இருந்து பிரேத உறுப்புக்களை அகற்றுவதற்கும் அழிப்பதற்கும் பொதி ஒன்றிற்கான கட்டணம்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம். [சி/7464]

# இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்

# சேரன் பல்பொருள் வாணிபம்

பல்வேறு பொருள்களையும் தன்னுள் சேர்த்து
பாங்குடனே இங்கு ஓங்கி நிற்கும்
பல் பொருள் வாணிபம்
பன்னிரு மாதங்களை சேவையில் பூர்த்தியாக்கி
நல்ல பெயருடனே முன்னேறி
வாடிக்கையாளரை நாடிச் சென்று
இல்லத் தேவைகளை இயல்பாக நிறைவாக்கும்
எண்ணம் உயிர்த்தெழுந்த
இரண்டாவது உயிர்ப்பு நாளிது
இருகரம்குவி த்து இன்முகத்தோடு அனைவரையும்
வருக! வருக! என்றே வரவேற்கிறது.

## மக்களின் தேவை எதுவோ - சேரனின் சேவை அதுவே

ஓர் ஆண்டு சேவையை பூர்த்தி செய்தாய்!
ஓங்குக பலபடிகள் என்றே- சகோதரச்
சேரனை வாழ்த்துகின்றோம்
வாழ்க பல்லாண்டு.

**விக்டர் இயந்திர**
**உதிரிப்பாக வாணிபம்**




ஒளிமயமான சேரன் நிறுவனமே!
ஓர் ஆண்டு பூர்த்தியுடன்
இரட்டிப்பு வளர்ச்சி பெற
இதயம் கனிந்து வாழ்த்துகின்றோம்.

**யாழ்ப்பாணன்**
**விற்பனை நிலையம்**

ஓர் ஆண்டு சேவையை பூர்த்தி செய்தாய்!
ஓங்குக பலபடிகள் என்றே- சகோதரச்
சேரனை வாழ்த்துகின்றோம்
வாழ்க பல்லாண்டு.

**விக்டர் இயந்திர**
**உதிரிப்பாக வாணிபம்**




ஒளிமயமான சேரன் நிறுவனமே!
ஓர் ஆண்டு பூர்த்தியுடன்
இரட்டிப்பு வளர்ச்சி பெற
இதயம் கனிந்து வாழ்த்துகின்றோம்.

**யாழ்ப்பாணன்**
**விற்பனை நிலையம்**

எண்ணில்லாத் தேவைகளை பூர்த்தி செய்து ஏற்றமுடன் ஈராண்டில்
புகுந்து கொள்ளும் எங்களின் சோதரன் - இணைபிரியா இளவல்
சேரன் பல்பொருள் வாணிபத்தின் சேவை பெருக!
வாழ்த்துகிறோம் வாழ்க!

**எழினி புடைவை வாணிபம்.**

**நெல்லியடியில் ஒரு மையம்.**
**வடமராட்சியில் வாடிக்கையாளர்களை**
**நாடிச் சென்று சேவையாற்றும்.**

**சாவகச்சேரியில் களஞ்சியம் அமைத்து**
**கொடிகாமம் வரையில் சேவைகள் விரியும்.**

**குடாநாட்டின் முக்கிய நகரங்களில் கூடிய**
**விரைவில் கிளைகள் திறந்து**
**நேரடி விநியோக சேவைகள் வழங்கும்.**

**வாடிக்கையாளர்களின்**
**வேண்டுகோளுக்கமைவாக குடாநாடுஎங்கும்**
**நேரடி விநியோக சேவைகள் தொடரும்.**

**பல் பொருட் தேவைகளின் பூர்த்தி;**
**சேரன் பல் பொருள் வாணிபத்தில் தீர்ப்பீர்.**

**குறைவான செலவில் நிறைவான சேவை**
**பெற நாடி வாரீர்**
சேரன் பல்பொருள் வாணிபம்
83, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். [சி-7473]

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
22-9-1993
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

மற்றவர்கள் உரிமைகளை ஆக்கிரமிக்கும், ஆர்வம் மிகவும் கண்மூடித்தனமானது, அல்லது கட்டுப்பாடு கெட்டது.

—பஸ்க்கியே கெனெல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## ஜேர்மன் நாசிகளும் சிங்கள பேரினவாதிகளும்

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் இறுதிகாலப் பகுதியில், ஜேர்மனி தோல்வியின் விளிம்பில் இருந்த போது, ஜேர்மன் இராணுவத்திற்கென வயது வேறுபாடின்றி சிறுவர்கள், முதியவர்கள் என பெரும் எண்ணிக்கையில் ஆட்சேர்ப்பு இடம்பெற்றது. இதில், மாணவர்கள், தொழிலாளர்கள் என்ற வேறுபாடோ அன்றி தகைமைகளோ எவையும் கருத்திற் கொள்ளப்படவில்லை.

'உலகை ஆளப் பிறந்தவர்கள் ஜேர்மனியர்கள்' என்ற ஹிட்லரின் நாசிச் சித்தாந்தத்தின் விளைவு இது. இச் சித்தாந்தத்தினால் பல்லாயிரம் ஜேர்மனியர்கள் போரில் கொல்லப்பட்டதோடு, 'பிஸ்மார்க்' என்ற உலக பெரும் இராஜதந்திரி உருவாக்கிய ஜேர்மனியும் சிதைந்தது. நாடு துண்டாடப்பட்டதோடு, யுத்தம் முடிந்து சுமார் 45 வருடங்களின் பின்பும் அந்நிய படைகள் நிலை கொண்டிருக்கும் நிலையும் உருவாகியது.

இவை யாவற்றிற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தது, ஹிட்லரின் இன வெறிக் கொள்கையாகும். ஹிட்லரின் இக் கொள்கையானது, ஜேர்மனியருக்கு போரில் தோல்வியை மட்டுமல்ல, எதிர்காலத்தில், அதாவது, இன்று வரை பெரும் அவமானத்தைத் தேடிக் கொடுத்ததொன்றாகவும் அமைந்தது. ஜேர்மனி தனது களங்கத்தைக் கழுவிக் கொள்ள எத்தனையோ முயற்சிகள் எடுத்தும் இன்னும் அதிலிருந்து ஜேர்மனியால் விடுபட முடியவில்லை.

ஆனால், இனவெறியர்களுக்கு கிடைத்த இப் பெரும வரலாற்றுப் பாடத்தை சிறிலங்கா பேரினவாதிகளால் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கைத்தீவு தனக்கே முழுமையான சொந்தம் என்றும், இது பௌத்த சிங்களவருக்கே தத்தம் பண்ணப்பட்ட தீவு என்றும் முரண்டு பிடிக்கின்றது. பாரம்பரியமாக தமிழர் வாழ்ந்துவரும் அவர்களின் தாயக பூமியை அபகரிக்கப் பார்க்கின்றது. சிங்களவருக்கு இன வெறியை ஊட்டிவளர்க்கின்றது. இதன் காரணமாக பெரும் ஆக்கிரமிப்புப் போர் ஒன்றில் பல வருடங்களாக ஈடுபட்டு வருகின்றது.

# ஆசிரியர் கலாசாலையில் இராணுவ பயிற்சி முகாம்

(கொழும்பு)

பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை வளவு இராணுவத்தினருக்கு ஒப்படைக்கப் பட்டிருப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து கல்வி பயிலும் ஆசிரியர்கள், பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோர் இணைந்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

1914-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சிக் கல்லூரியினால் நாட்டுக்குத் தேவையான கணிசமான ஆங்கில ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் இப்பயிற்சிக் கல்லூரியை மூடிவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் ஆண்கள் விடுதி, உணவுச் சாலை, ஏஷல் மண்டபம், விளையாட்டு திடல், மாடி வர்த்தக நிலையம் என்பன இராணுவத்தினரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருவதாகவும் இராணுவத்தினருக்கான பயிற்சி முகாம் ஒன்றை இங்கு அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### நல்லின விதைநெல் பெற முயற்சி

(யாழ்ப்பாணம்)

கால போக நெற்பயிர்ச்செய்கைக்காக நவாலி, ஆனைக்கோட்டை மானிப்பாய் விவசாயிகள் நல்லின விதை நெல் இல்லாமையினால் விவசாய செய்கை மேற்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவருடம் போதிய அளவு மழைவீழ்ச்சியின்மையால் இப்பகுதிகளில் விளைந்த நெல் வீரியம் குறைந்ததாக இருப்பதுடன் விதை நெல்லுக்கு உகந்ததல்ல என விவசாயத் தரப்பினர் கூறுகின்றனர். இதேவேளை நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிவிவசாயிகளுக்கு நல்லின விதை நெல் பெற்றுத்தருமாறு உடுவில் சமநல சேவை நிலையத்தினை நாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

### அருட்பாந்த உற்சவம்

யாழ் கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த உற்சவம் நாளை பிற்பகல் 4 30 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது. சனிக்கிழமை நற்கருணைத் திருப்பலியும் ஆராதனையும் ஞாயிறன்று திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன.

## செலவுகளை சுருக்கும்படி அமைசசர்கள் கோரப்படலாம்?

### - 'ராவய' தெரிவிப்பு

(கொழும்பு)

சகல அமைச்சர்களும் தமது செலவுகளை பத்து சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சிறிலங்கா அரசாங்கம் கேட்டுக் கொள்ளும் என்று 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன் சமூக சேவைத் திட்டங்களும் குறைக்கப்படலாம் எனவும் இளைஞர் சீருடை விநியோகம் இவ்வருடத்துடன் நிறுத்தப்படலாம் எனவும் கூறப்படுகின்றது. இதேவேளை அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஐந்து வருட சம்பள முற்பணக் கட்டளை அரசு நிறுத்தியுள்ளது தெரிந்ததே.

இந்த நடவடிக்கைகள் சிறிலங்கா அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியில் சிக்கியிருப்பதையே காட்டுவதாக 'ராவய' மேலும் தெரிவித்துக் கொண்டுள்ளது.

## களுத்தாவ கிராமத்தில் ஆண்கள் எவரும் இல்லை

(கொழும்பு)

மாத்தளை மாவட்டம் தம்புள்ள தேர்தல் தொகுதியில் இருக்கும் நிக்கிரிய பொலிஸ் பிரிவிலுள்ள களுத்தாவ கிராமத்தில் ஆண்கள் எவரும் இப்போது இல்லையென்று கூறப்படுகின்றது. 1987-90 க்கும் இடைப்பட்ட காலத்தில் அரச ஆதரவு பெற்ற கொலைகாரக் கும்பல்களாலும், இராணுவம், பொலிஸ் மற்றும் ஊர்காவற் படையினராலும் 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பலரும் கொல்லப்பட்டனர். மேலும் இக்கிராமத்திலிருந்து இராணுவம் மற்றும் ஊர்காவற்படையில் இணைந்திருந்தோர் மற்றும் அரச படையினருக்காக உளவு பார்த்தவர்கள் ஜே.வி.பியினராலும் கொல்லப்பட்டும் உள்ளனர். அத்துடன் இக் கிராமத்திலிருந்து படையில் இணைந்திருந்தவர்களில் பலரும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் உயிரிழந்ததாகவும் கூறப்படுகின்றது. இராணுவம் மற்றும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட இக் கிராம ஆண்கள் பலரும் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆக சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்தின் ஊடாக மாறிப் போயுள்ள இக் கிராமத்தில் தற்போது ஆண்கள் எவருமே இல்லாத நிலை தோன்றியுள்ளது.

## கைக்குண்டுடன் பிக்கு; பொலிஸாரால் கைது

கைக்குண்டுடன் பயணம் செய்த புத்தபிக்கு ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்புப் பகுதியிலுள்ள ஹிம்புலிலாப்பிட்டியில் கடந்த புதனன்று சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மேற்படி பிக்குவைச் சோதனையிட்டபோது அவரிடம் கைக்குண்டொன்று இருப்பதைக் கண்டு அவரைக் கைது செய்தனர்.

இவர் ஒரு பண்டாரம ஆசிரியர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவரைப் பொலிசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## சிற்றூழியர்வெற்றிடங்கள்

பாடசாலைகளில்

## தென்னிலங்கை பகுதியில் மீண்டும் ஆட்கடத்தல்

[கொழும்பு]

அவசரதந்தி ஒன்றை அனுப்பி

## காவியத்துப் போர் மகன்

பல்லவி

நல்லூரின் வீதியெங்கும் கண்ணீரால் வெள்ளம்
நம்பிநின்றோம் இரங்கவில்லை பாவியரின் உள்ளம்
கல்லான நெஞ்சுடனே இந்தியர்கள் நின்றார்
காவியத்துப் போர்மகனைக் கண்ணெதிரேகொன்றார்

சரணம்

பாரதத்தை வாவெனவே இங்கு அழைத்தோமா-வந்து
படைநடத்து என்றெவரும் தூது விடுத்தோமா
வேரறுக்க வந்தவர்கள் வாளெடுத்து நின்றார் எங்கள்
வீரமகன் திலீபனுக்கு சாவிதித்துக் கொன்றார்.

அரிசி கொண்டு வந்தவரை ஆளவிடுவோமா - புலி
ஆடிநின்ற தாய்மடியில் வாழவிடுவோமா
உரிமையினைக் கேட்டெமது வீரன் எழுந்தானே -
ஏதும்
உண்ணமறுத் திங்குஒரு போரைத் தொடுத்தானே

பாடிநின்ற பூங்குயிலைக் கூட்டிலடைப்பாரா - பிர
பாகரனின் பிள்ளைகளை வாட்டியெடுப்பாரா
ஏட்டிலடங் யாதவீரம் இங்கெழுந்தது —அண்ணன்
இருவிழியும் சிவந்ததினால் போர் எழுந்தது

—புதுவை இரத்தினதுரை

## வெளியுறவு அமைச்சர் ஹமீட் நியூயோர்க் பயணமானார்

[கொழும்பு]

சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீட் கடந்தவாரம் நியூயோர்க் புறப்பட்டுச் சென்றுள்ளார். ஐ.நா.பொதுச்சபையின் 48 ஆவது அமர்வில் கலந்துகொள்ளும் பொருட்டே இவர் அமெரிக்கா பயணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

போகும் வழியில் அமைச்சர் ஹமீட் லண்டனில் தரித்து அங்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள சிறிலங்கா பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுநடத்துவார் என்றும் தெரியவருகிறது.

அமைச்சர் நியூயோர்க்கில் தங்கியிருக்கும்காலப்பகுதியில், அவர் பல வெளிநாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், முக்கியஐ.நா.அதிகாரிகள் குறிப்பாக ஐ.நா.பொதுச்செயலர் பூட்ரஸ் காலி ஆகியோரையும் சந்திக்க திட்டமிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வங்காளக்கொலராபரவலாம்

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

கொலரா நோய் இலங்கையில் பரவும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

'வங்காளக்கொலரா' என்று அழைக்கப்படும் இந்த வாந்திபேதி நோயினால் சென்னையிலும், பங்களாதேசிலும் கடந்த வருடம் சுமார் 80,000 பேர் பீடிக்கப்பட்டதாகவும் இந்நோயினால் பலமரணங்கள் சம்பவித்ததாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொலரா நோய் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படியும், தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு அனைத்து ஆஸ்பத்திரிகளையும் பணித்துள்ளது.

மேலும் கடும்வயிற்றோட்ட நோய் ஏற்படுபவர்களுக்கு 'வங்காளக் கொலரா'வுக்கு உரிய சிகிச்சையை வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். அத்துடன் இந்த நோய் கண்டவர்களின் மனிதக் கழிவின் மாதிரிகளை கொழும்பு வைத்திய ஆய்வு நிலையத்துக்கு அனுப்புமாறும் அவர்பணித்துள்ளார்.

## தாண்டிக்குளத்தில் இருவர்

யாகும். ஹிட்லரின் இக்கொள்கையானது, ஜேர்மனியருக்கு போரில் தோல்வியை மட்டுமல்ல, எதிர்காலத்தில், அதாவது, இன்று வரை பெரும் அவமானத்தைத் தேடிக் கொடுத்ததொன்றாகவும் அமைந்தது. ஜேர்மனி தனது களங்கத்தைக் கழுவிக் கொள்ள எத்தனையோ முயற்சிகள் எடுத்தும் இன்னும் அதிலிருந்து ஜேர்மனியால் விடுபட முடியவில்லை.

ஆனால், இனவெறியர்களுக்கு கிடைத்த இப்பெரும வரலாற்றுப் பாடத்தை சிறிலங்கா பேரினவாதிகளால் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கைத்தீவு தனக்கே முழுமையான சொந்தம் என்றும், இது பௌத்த சிங்களவருக்கே தத்தம் பண்ணப்பட்ட தீவு என்றும் முரண்டு பிடிக்கின்றது. பாரம்பரியமாக தமிழர் வாழ்ந்துவரும் அவர்களின் தாயக பூமியை அபகரிக்கப் பார்க்கின்றது. சிங்களவருக்கு இன வெறியை ஊட்டிவளர்க்கின்றது. இதன் காரணமாக பெரும் ஆக்கிரமிப்புப் போர் ஒன்றில் பல வருடங்களாக ஈடுபட்டு வருகின்றது.

இதன் காரணமாக இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜேர்மனி தனது முழு வளத்தினையும் போருக்காகப் பயன்படுத்தியது போன்று சிறிலங்காவும் தனது மனித, மற்றும் பொருளாதார வளம் யாவற்றையும் யுத்தத்திற்கெனத் திருப்பி விட்டுள்ளது. ஆனால், ஜேர்மனிக்கும், சிறிலங்காவிற்கும் இடையில் சிறு வேறுபாடுகள் உள்ளன. அதாவது, ஜேர்மனி தனது சொந்தப்பலத்தில் முழுமையாக தங்கிநின்று போரை நடத்தியது. சிறிலங்காவோ அந்நிய நாடுகளிடம் இரந்து பெறும் உதவியுடன் யுத்தத்தை நடத்தப்பார்க்கின்றது.

அதாவது, உள்நாட்டில் கிடைக்கும் வருமானத்தையும், வெளிநாடுகளில் இருந்து பெறும் கடன்களையும் கொண்டு போரை நடத்துகின்றது. இந்தவேளை இராணுவத்தில் ஏற்பட்டுள்ள ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவென சலுகைகள் பலவற்றை அறிவித்துள்ளதோடு, தற்சமயம் பாடசாலை மாணவர்களையும், தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்ளவும் முற்படுகின்றது. இதற்கென அண்மையில், பகிரங்க அறிவிப்புக்களையும், கோரிக்கைகளையும் இராணுவத் தளபதிகளும், அதிகாரிகளும் விடுத்தும் வருகின்றனர்.

ஆனால், சிறிலங்கா இராணுவத்திற்குப் போர் தொடங்கிய காலகட்டத்தில் ஆவ்வாறானதொரு நெருக்கடி இருக்கவில்லை, தமிழ்த்தேசிய இனத்தை மிரட்டிப் பணிய வைத்து விட முடியும் என இனவெறியாளர்கள் எண்ணினர். தமது இனத்தைப் பாதுகாக்கப் புறப்பட்ட போராளிகளைப் பார்த்து மழலைகள் பட்டாளம் என்றும் கிண்டல் செய்தனர். ஆனால் கடந்தகால போரின் விளைவுகள் நிலைமையை மாற்றியுள்ளன.

பாடசாலைக்குச் சென்று இராணுவத்திற் சேருமாறு மாணவருக்கு அழைப்பு விடுக்கும் அளவிற்கு நிர்ப்பந்தத்தை இராணுவ அதிகாரிகளுக்கு ஏற்படுத்தியுள்ளது, இது எவ்வாறெனினும் போரில் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற பேரினவாதத்தின் இனவெறியை வெளிப்படுத்துகின்றது. மறுபுறம் சிங்கள பேரினவாதத்தின் அவலத்தைக் காட்டுகின்றது. வரலாற்றுப் பாடத்தை மாற்ற முற்பட்ட சிங்களப் பேரினவாதத்தின் தோல்வியைக் காட்டுகின்றது.

சாயத் தரப்பினர் கூறுகின்றனர். இதேவேளை நவாலி ஆனைக்கோட்டைப் பகுதி விவசாயிகளுக்கு நல்லின விதை நெல் பெற்றுத்தருமாறு உடுவில் சமநல சேவை நிலையத்தினை நாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## வருடாந்த உற்சவம்

யாழ் கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த உற்சவம் நாளை பிற்பகல் 4.30 மணிமுதல் ஆரம்பமாகவுள்ளது. சனிக்கிழமை நற்கருணைத் திருப்பலியும் ஆராதனையும் ஞாயிறன்று திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன.

பாடசாலைகளில்

மேற்பட்ட ஆண்கள் பலரும் கொல்லப்பட்டனர். மேலும் இக்கிராமத்திலிருந்து இராணுவம் மற்றும் ஊர்காவற்படையில் இணைந்திருந்தோர் மற்றும் அரச படையினருக்காக உளவு பார்த்தவர்கள் ஜே.வி.

சேர்க்கப்படுகின்றனர். ஆ... சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்தின் ஊடாக பாதிப்புற்றுப் போயுள்ள இக்கிராமத்தில் தற்போது ஆண்கள் எவருமே இல்லாத நிலை தோன்றியுள்ளது.

## கைக்குண்டுடன் பிக்கு; பொலிஸாரால் கைது

கைக்குண்டுடன் பயணம் செய்த புத்தபிக்கு ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்புப் பகுதியிலுள்ள ஹிம்புட்லாப்பிட்டியில் கடந்த புதனன்று சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மேற்படி பிக்குவைச் சோதனையிட்டபோது அவரிடம் கைக்குண்டொன்று இருப்பதைக் கண்டு அவரைக் கைது செய்தனர்.

இவர் ஒரு பட்டதாரி ஆசிரியர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவரைப் பொலிசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## சிற்றூழியர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை

(திருக்கோணமலை)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு இந்த இரு மாகாணங்களிலும் உள்ள 1, 200க்கும் அதிகமான சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்ப உள்ளது.

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றிலுள்ள ஆறு பிரிவுகளில் 184 வெற்றிடங்களும், கல்வி வலயம் இரண்டில் உள்ள எட்டுப் பிரிவுகளில் 225 வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன.

கிளிநொச்சி 4 பிரிவுகளில் 73 வெற்றிடங்களும், மன்னார் 4 பிரிவுகளில் 51 வெற்றிடங்களும் முல்லைத்தீவு 5 பிரிவுகளில் 53 வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலைத்தொழிலாளர், சுகாதாரத் தொழிலாளர், பாடசாலைக் காவற்காரர்கள் தோட்டத் தொழிலாளர்கள் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன.

## மட்டக்களப்பு வாவியில் மீனவர்மீது ஹெலி தாக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் வாவிப் பகுதியை வட்டமிட்ட சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று நடத்திய கலிபர் தாக்குதல்களினால் இரு மீனவர்கள் காயமடைந்தனர்.

கடந்த 18ஆம் திகதி இரவு 7 மணிமுதல் 7.30 மணிவரையும் வலையிறவு பாலத்திற்கும் கன்னன்குடா கிராமத்திற்கும் இடைப்பட்ட வாவிப்பகுதியை வட்டமிட்ட உலங்குவானூர்தி ஒன்றே கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டது.

இதனால் அப்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இரு மீனவர்களே காயமடைந்தவர்களாவர். இவர்கள் இருவரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கத்தியால் குத்தியவருக்கு விளக்கமறியல்

(நெல்லியடி)

இளம் குடும்பஸ்தர் ஒருவரைக் கத்தியால் வெட்டி காயப்படுத்தியவரை எதிர்வரும் 1-10 1993 வரை விளக்கமறியலில் வைக்குமாறு, பருத்தித்துறை நீதிமன்றத்தின் நீதியாளர்கள் உத்தரவிட்டனர்.

வல்வெட்டித்துறை சிவன் கோவிலடியைச் சேர்ந்த அருளம்பலம் குமார் (வயது 35) என்பவரை சிவஞானசுந்தரம் என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வல்வெட்டித்துறை பெற்றோல் நிலையத்திற்கு அண்மையில் வைத்து, கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்தார் என்ற குற்றத்திற்காகவே அடுத்த மாதம் 1ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதியாளர்கள் நேற்றுக் காலை உத்தரவிட்டனர்.

குறித்த சந்தேக நபரை, வல்வெட்டித்துறை காவல் பணிமனையினர், நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தனர். (30)

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

கொலரா நோய் இலங்கையில் பரவும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

'வங்காளக்கொலரா' என்று அழைக்கப்படும் இந்த வாந்திபேதி நோயினால் சென்னையிலும், பங்களாதேசிலும் கடந்த வருடம் சுமார் 80,000 பேர் பீடிக்கப்பட்டதாகவும் இந்நோயினால் பலமரணங்கள் சம்பவித்ததாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜோபெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொலரா நோய் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படியும், தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு அனைத்து ஆஸ்பத்திரிகளையும் பணித்துள்ளது.

மேலும் கடும்வயிற்றோட்ட நோய் ஏற்படுபவர்களுக்கு 'வங்காளக் கொலரா'வுக்கு உரிய சிகிச்சையை வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். அத்துடன் இந்த நோய் கண்டவர்களின் மனிதக் கழிவின் மாதிரிகளை கொழும்பு வைத்திய ஆய்வு நிலையத்துக்கு அனுப்புமாறும் அவர்பணித்துள்ளார்.

## தென்னிலங்கை பகுதியில் மீண்டும் ஆட்கடத்தல்

[கொழும்பு]

தென்னிலங்கையில் மீண்டும் ஆட்கடத்தலும் கொலைகளும் அதிகரித்துள்ளன. இதனைத்தடுத்து நிறுத்தவும், சம்பந்தப்பட்ட கொலைஞர்களும் பலரை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் இரு எம்.பிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவுக்கு அவசரதந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இக்கொலை குழு சுதந்திரமாக நடமாடி கொலைகளையும் ஆட்கடத்தலையும் மேற்கொள்வதாக கொழும்பு மாவட்ட எம்.பி ஹட்சன் சமரசிங்கவும், அம்பாந்தோட்டை எம்.பி மகிந்த ராஜபக்சவும் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

## தாண்டிக்குளத்தில் இருவர் இராணுவத்தால் கைது

( வவுனியா )

தடை செய்யப்பட்ட பொருட்களை வட பகுதிக்குள் எடுத்து வர முனைந்த இருவர் தாண்டிக்குளம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நெடுங்கேணியைச் சேர்ந்த செல்லத்துரை பெருமாள் ( வயது 24 ) புதுக்குளம் ஒட்டிசுட்டானைச் சேர்ந்த டேவிற் சந்திரன் ( வயது 27 ) எனத் தெரிய வந்துள்ளது.

இதே வேளை லக்ஸ்பிறே, ஐசிங், சவர்க்காரம் போன்றவற்றை எடுத்து வந்த நபர்கள் தாண்டிக்குள தடை முகாம் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் வட பகுதிக்குள் செல்லவிடாது திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## மூல ஒதுக்கீடு திட்டத்தை நவம்பர் 15முன் அனுப்புக!

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

1994ஆம் ஆண்டிற்கான பிரதேச அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடு சம்பந்தமான திட்டத்தினை ஒவ்வொரு பிரதேச செயலகமும் எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக தனக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் சகல பிரதேச செயலர்களையும் பணித்துள்ளார்.

இத்திட்டம் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து குழுவின் அறிக்கையுடன் எதிர்வரும் நவம்பர் மாதம் வடகிழக்கு மாகாணசபை பிரதம செயலருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதன்படி ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (யா)

ரஷ்யாவில்

## பாராளுமன்றம் கலைப்பு அரசியல் நெருக்கடி அதிகரிப்பு

(மாஸ்கோ)

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் அந்நாட்டுப் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டிருப்பதையடுத்து அரசியல் சாசன நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினமிரவு தொலைக்காட்சி மூலம் உரை நிகழ்த்திய பொறிஸ் யெல்ட்சின் டிசம்பர் 11-ம், 12-ம் திகதிகளில் புதிய தேர்தல்கள் நடைபெறும் என்று அறிவித்தார். அத்துடன் தாம் மேற்கொள்ளும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு பாராளுமன்றம் முட்டுக்கட்டை போடுவதால் தான் பாராளுமன்றத்தைக் கலைக்க நேரிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்,

இதேவேளை அதிபரின் இந்த நடவடிக்கையை அவரை எதிர்ப்போர் கடுமையாக விமர்சித்துள்ளனர். அத்துடன் அதிபரின் இந்த அறிவிப்பை ஒரு திடீர் புரட்சி என்று வர்ணித்துள்ள துணை அதிபர் அலெக்சாண்டர் றொட்ஸ்காய் தாமே தற்காலிக அதிபராக பதவி ஏற்பதாகவும் அறிவித்துள்ளார். ரஷ்ய அரசின் பாராளுமன்றம் நடத்திய அவசரக் கூட்டமொன்றில் அதிபர் யெல்ட்சின் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் துணை அதிபர் அலெக்சாண்டர் றொட்ஸ்காய் தற்காலிக நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும் தீர்மானித்து அறிவித்துள்ளது.

இந்தச்சம்பவங்களால் ரஷ்ய அரசியலில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு இருக்கின்றது. அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் பலவும் அதிபர் பொறிஸ்யெல்ட்சினுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று 22-9-1993

## வெளிச்சம் இரண்டாம் ஆண்டு சிறப்பிதழ் வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழ். இரண்டாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழாக இன்று வெளிவருகின்றது. அதிக பக்கங்களைக் கொண்ட இவ்விதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் நீதியாளர்கள் சத்தியப் பிரமாணத்தின்போது வழங்கிய செய்தியுடன் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும், பிரம்மஞானிஎழுதிய கருத்துலகமும் வாழ்வியக்கமும்' என்ற கட்டுரையும் உள்ளன.

இவற்றுடன் அடேல் ஆன், நம்பியாரூரன், வீ. பரந்தாமன், புதுவை இரத்தினதுரை, உதயலட்சுமி, இளந்திரையன், சி. பாவரசன், சுஜா, கருணாகரன், தா. இராமலிங்கம், இ. திருமாறன், பெருமாள் ஆகியோரின் கவிதைகளும், பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் கோகிலா மகேந்திரன், க. சிதம்பரநாதன், ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

சிறுகதைகளை செம்பியன் செல்வன், சாந்தன், ச. நகுலேஸ்வரன், மணலாறு விஜயன், இயல்வாணன் ஆகியோர் எழுதியுள்ளனர். முருகையன் எழுதிய நாடகமும், கப்டன் மலரவனின் 'போர் உலா' மதிப்புரையும் வேறுசில அம்சங்களுமாக 'வெளிச்சம்' இரண்டாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் நூறு பக்கங்களில் வெளிவருகிறது.

### வெட்டுப்புள்ளியை

நாளை மறுதினம் கொழும்பு செல்லவுள்ளார்.

நாட்டில் வடபகுதியில் மாணவர்கள் கடந்தகாலப் பரீட்சைகளில் எரிபொருள், போக்குவரத்து மற்றும் பொருளாதார தடை காரணங்களாக மாணவர்கள் பல்வேறு இன்னல்களாக் பரீட்சை பாதிப்படைந்துள்ளது. இவ்வாறானவொரு சூழ்நிலையில் மாணவர்களின் வெட்டுப்புள்ளியை கருத்திற்கொள்ளாது யாழ். மாவட்டப் பிரதேச மாணவர்களின்கல்விநிலையை உணர்ந்து அதற்கேற்ப அவர்களுக்குஎந்தவொரு பீடத்திலும் அவர்களின் அனுமதியைக் குறைக்க வேண்டாம் என எடுத்துக்கூறவுள்ளார்.

இதேவேளை கடந்தகாலங்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிநிலை பற்றாக்குறை தன்மை பற்றியும், மற்றும் எழுபொருள் காகிதாதிகள் தொடர்ச்சியாக வழங்குதல் பற்றியும் மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு விளக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### கடந்த

கட்டத்தில் நன்றாக வளர்சியடைந்து பின்னரே குறைவடையும் என்றும் எனவே மக்கள் மிகவிழிப்பாக செயல்படுவதன் மூலம் இதனை ஓரளவு கட்டுபடுத்தலாம் என தெரிவித்தார்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் வாந்திபேதி நோய்க்கான விடுதி அமைவிடத்தினால் இந்நோய் பரவும் வேகம் அதிகரிக்கலாம் என யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சர் பிரிவினர் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் நடைபெற்ற வாராந்த கூட்டத்தின் போது இவர்கள் இவ்வாறு கவலை தெரிவித்தனர். இவ்விடுதிக்கு அருகே யாழ். போதனா வைத்திய சாலை கட்டடத்திலேயே ஒரு சிற்றுண்டிச்சாலை இருப்பதனால் கிருமிகள் இலகுவாக பரவக்கூடிய சாத்தியம் தென்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவ் விடுதியை அப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்துவதா? அல்லாவிடின் இச்சிற்றுண்டிச்சாலையை தற்காலிகமாக மூடிவிடுவதா? என்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி முடிவெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. (நி)

## சந்திக்கவும்

அரசாங்க பெருந்தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றி அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற போது சேவையிலிருந்து / ஓய்வூதியம் பெற்ற யாழ். கோட்டப் பாடசாலைகளைச் சார்ந்த ஆசிரியர்கள் யாராயினும் இருப்பின் அவர்களை 01. 10. 1993 வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கு யாழ் கோட்டக்கல்வி அலுவலக உதவியாளரைச் சந்தித்து விபரங்களை கொடுக்கும்படி யாழ் கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி வேலாயுதம் அவர்கள் கேட்டுக் கொள்கின்றார்

## கப்டன் பரதனுக்கு மன்னாரில் இறுதி அஞ்சலி

(மன்னார்)

எதிர்பாராதவெடிவிபத்தில் வீரச்சாவடைந்த கப்டன் பரதன் (பாரத்) இன் வித்துடல் மன்னாரில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்பட்டது.

கடந்த 20 திகதி வீரச்சாவடைந்த பாரத்தின் புகழுடல் மன்னாரில் நானாட்டான், மடு ஆகிய இடங்களிலே மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டது இதன்போது பெருமளவு மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்து தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

இறுதியாக வித்துடல் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு இராணுவ மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விதைக்கப்பட்டது

## வன்னிப் பகுதியில் திலீபன்நினைவுநிகழ்வுகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் சேமமடு பகுதியில் தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த 20 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டன.

இங்கு கடந்த செப்ரெம்பர் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை நினைவு கூர்ந்தும் தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டும் நினைவஞ்சலிக் கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டம் மடு மற்றும் நானாட்டான் பூநகரி பகுதிகளில் தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் மக்களால் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.

கடந்த 20 ஆம் 21 ஆம் திகதிகளில் தியாகி திலீபன் நினைவாக உண்ணாவிரத நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் பள்ளிச் சிறுவர்கள் முதல் முதியோர்வரையில் கலந்துகொண்டனர்.

### வடக்கில்

காரைநகர் கடற்படைத் தளத்தை மிஞ்சுமளவுக்கு இக் கடற்படைத்தளம் அமையும் என்று தெரிய வருகிறது. இக் கடற்படைத்தளம் அமைக்கப் பட்டதும் வடமாகாணத்தின் பிரதான கடற்படைத்தளமாகவே இது விளங்கும் என்றும் தெரியவருகிறது.

### ஆசிரியர்கள்

மேலும் தெரிவித்துள்ளார்.

பயிற்றப்பட்ட சகல ஆசிரியர்களும் இந் நிலையங்களால் நடத்தப்படும் பாடநெறிகளை பின்பற்றலாம். சேவையில் ஈடுபட்டிருக்கும்போது விடுமுறை நாட்கள் மற்றும் குறிப்பிட்ட நாட்களில் இப் பாடநெறிகளைப் படிக்கலாம்.

மூன்று வருடகாலம் இப் பாடநெறிகளைப் படித்த பின்னர் இவர்கள் பட்டதாரிகளாக பட்டம் பெறுவார்கள். சகலபாடசாலைகளிலும் கல்வி போதிக்கும் தரத்தை உயர்த்தும் பொருட்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மோட்டார்

தொடக்கம் மாலை 1-00மணி வரையும் மேற்கொள்ளுமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றனர் சிறிலங்காவினால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் உள்ளோரும் மூல ஆவணங்கள் இல்லாதோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொ

### திலீபன்

வுகளையும் சித்திரிக்கும் வகையிலும் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருகிறன. இக் கலை நிகழ்வுகளில் பெருமளவு பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி வருகின்றனர்.

மேலும் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் அனைத்தும் இணைந்து நாளை வெள்ளிக்கிழமை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அடையாள உண்ணா நோன்பினை அனுஷ்டிக்கவுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் அனைத்து பொது மக்களுக்கும். பாடசாலை மாணவர்களுக்கும்

வைரவர் ஆலய முன்றலில் அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

இவ் உண்ணாவிரதத்தை அச்சுவேலி சிற்றார் பொறுப்பாளர் திரு. மதியழகன் ஆரம்பித்து வைப்பார். அச்சுவேலி பஸ்நிலையத்தில் தியாகி திலீபனின் வாழ்க்கை வரலாறுகள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி பாடசாலைகள் மட்டத்திலும் லெப். கேணல் திலீபனின் நினைவாக சிற்றுரைகள். நினைவுரைகள் நடைபெற்று வருகின்றன பாடசாலையில் வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் குறிப்பிட்டசில மணிநேரம் இதற்கென ஒதுக்கி பாடசாலையில் அலங்கரிக்கப் பட்டு வைக்கப்பட்டிருக்கும்

## நில்கிரி புறப்பட்டது

யாழ். குடாநாட்டிற்கான ஒருதொகுதி மண்ணெண்ணெயுடன் 'நில்கிரி' கப்பல் நேற்று கொழும்பில் இருந்து புறப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கப்பல் நாளை அல்லது நாளை மறுதினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## அரச அதிபர் யாழ். திரும்புகிறார்

இவ்வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்து சேரவிருக்கும் நில்கிரி கப்பல் மூலம் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் யாழ். திரும்புகிறார் என செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இவர் கொழும்பில் பல அரசாங்க, இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளதாகவும் இதில் எதிர்வரும் மழைக்காலத்திற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை முன் கூட்டியே விரைந்து பெற்றுக் கொள்ள மேலும் ஒரு கப்பலைச்சேவையில் ஈடுபடுத்துவது குறித்து விரிவாக ஆராயப் பட்டதாகவும் தகவலொன்று தெரிவிக்கிறது. (நி)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

(23-9-1993)



அன்ரனி பற்றிக் (சூரி) மில்டன்

தாய் மண் வாழ்க
தாய் மண்ணில் உதித்த
தவப்புதல்வா வாழ்க
வளம் கொழித்து உன்
வாய் சிரிக்க வேண்டும்
தனம் நிறைய வேண்டும் - நல்ல
குணம் சிறந்து
மனம் வளர்ந்து - வையத்து
தலைமை கொள்ள வேண்டும் - உன்
வாழ்வு கண்டு நாம்
பெருமை கொள்ள வேண்டும்
நாடு உனை வாழ்த்த வேண்டும் - அதை
நாம் கண்டு மனமகிழ வேண்டும்!
இந்த நல் வரம் வேண்டும் - வல்ல
இறைவன் எல்லாம்
தர வேண்டும்!

அன்பு பெற்றோர், சூரி ஸ்ரெலா
அன்பு உறவினர்,
அன்பு நண்பர்கள்.

மார்க்கட் வீதி,
மாதகல். (சி-7465)

## கொக்குவில் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்: வெள்ளிக்கிழமை 24-09-1993
நேரம்: பிற்பகல் 2 மணி.

பிரதம விருந்தினர்:
திரு. இரா. சுந்தரலிங்கம்
வடமாநில கல்விப் பணிப்பாளர்

## வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம் முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தினால் தியாகி திலீபனின் நினைவால் அனுட்டிக்கப் பெறும் அடையாள உண்ணாவிரதம் 24-9-1993 வெள்ளிக்கிழமை நல்லூரில் இடம் பெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது காலை 7 00 மணிக்கு எமது புதிய காரியாலயத்தில் ஒன்று கூடி 8. 00 மணிக்கு ஊர்வலமாக நல்லூர் செல்வதற்கு ஆயத்தமாகுமாறு கேட்டுக் கொள்கின்றோம். எமது சங்கத்தின் எழுச்சியை

இதேவேளை கடந்தகாலங்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிநிலை பற்றாக்குறை தன்மை பற்றியும், மற்றும் எரிபொருள் ஊகிதாதிகள் தொடர்ச்சியாக வழங்குதல் பற்றியும் மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு விளக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்துவதா? அல்லாவிடின் இச்சிற்றுண்டிச் சாலையை தற்காலிகமாக மூடிவிடுவதா? என்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி முடிவெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. (நி)

குறிப்பிட்ட நாட்களில் இப் பாடநெறிகளைப் படிக்கலாம்.

மூன்று வருடகாலம் இப் பாடநெறிகளைப் படித்த பின்னர் இவர்கள் பட்டதாரிகளாக பட்டம் பெறுவார்கள். சகல பாடசாலைகளிலும் கல்வி போதிக்கும் தரத்தை உயர்த்தும் பொருட்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டனர்.

கிறது. (நி)

மார்க்கட் வீதி, அன்பு பெற்றோர், சூரி ஸ்ரெலா
மாதலே. (சி-7465) அன்பு உறவினர், அன்பு நண்பர்கள்.


வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

## மூக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தினால் தியாகி திலீபனின் நினைவால் அனுட்டிக்கப்பெறும் அடையாள உண்ணாவிரதம் 24-9-1993 வெள்ளிக்கிழமை நல்லூரில் இடம் பெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது காலை 7.00 மணிக்கு எமது புதிய காரியாலயத்தில் ஒன்றுகூடி 8.00 மணிக்கு ஊர்வலமாக நல்லூர் செல்வதற்கு ஆயத்தமாகுமாறு கேட்டுக் கொள்கின்றோம். எமது சங்கத்தின் எழுச்சியை இவ்வூர்வலம் மேலோங்கச் செய்யட்டும்.

குறிப்பு:

சகல நிலையங்களும் 24-9-1993 வெள்ளிக்கிழமை முழுமையாய் மூடி உரிமையாளர், தொழிலாளர், கிராமியத் தொழிலாளர் அனைவரும் சமுகமளிக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு: இடம் புதிய காரியாலயம்
இல. 18 இராசாவின் தோட்டலேன்,
யாழ்ப்பாணம்.
(புதிய பஸ் நிலைய அருகாமை)

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| அ. றொபேட் | க. சந்திரலிங்கம் | சி. சிவலிங்கம் |

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
யாழ். கிளை – 1 (6079)



## மரண அறிவித்தல்

திருமதி
### சிவகாமியம்மா இராசதுரை

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்தவரும் தற்போது பிரேமச்சந்திரன் வீதி, (இராசகாரியர் வீதி மானிப்பாய் வடக்கில் வசித்தவருமாகிய திருமதி சிவகாமியம்மா இராசதுரை கடந்த திங்கட்கிழமை (20. 09. 93இல்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா, பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், திரு. இராசதுரையின் (இளைப்பாறிய லிகிதர், காணி அபிவிருத்தித் திணைக்களம்) அன்பு மனைவியும், திரு ஹரிகரன் (கொழும்பு), திரு. கருணாகரன் (ராஜன்), திரு. ரஞ்சன், திரு. இந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி சுமதினி, திருமதி ஞானரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வி வளர்மதியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-09-93) பிற்பகல் 3.00 மணியளவில் பிரேமச்சந்திரன் வீதி (இராசகாரியர் வீதி)யில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

பிரேமச்சந்திரன் வீதி, தகவல்;
மானிப்பாய் வடக்கு, ராஜன்
மானிப்பாய். (6078)


## மோட்டார்

தொடக்கம் மாலை 1-00மணி வரையும் மேற்கொள்ளுமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றனர் சிறிலங்காவினால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் உள்ளோரும் மூல ஆவணங்கள் இல்லாதோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் தவறாது தத்தமது குடும்ப அட்டைகளையும் தம்முடன் எடுத்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பதிவிற்குட்படுத்திய வடமராட்சிப் பகுதியினைச் சேர்ந்த மோட்டார் ஊர்திகளின் உரிமையாளர்களினது மோட்டார் ஊர்திகளை வடமராட்சியில் அமைந்துள்ள அவசர அனுமதிச் செயலகங்களான மாலுசந்தி, உடுப்பிட்டிச் செயலகங்களிலும், தென்மராட்சி/பளைப் பகுதியினைச் சேர்ந்த மோட்டார் ஊர்தி உரிமையாளர்களினது மோட்டார் ஊர்திகளை சாவகச்சேரி அவசர அனுமதிச் செயலகத்திலும் வைத்தே பரிசோதனைக்குட்படுத்தப்படும் என்பதினையும், ஊர்திகளைப் பரிசோதனைக்குட்படுத்தும் காலம்/நேரம் பற்றி பின்னர் பொதுமக்களிற்கு அறியத்தரப்படுமெனவும், மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

## பாராளுமன்ற

இது குறித்து கருத்து வெளியிட்ட பி.பி.ஸி ஜனாதிபதி விஜேதுங்க இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்று கூறியதை சுட்டிக்காட்டியது. அடுத்தமாதம் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையில் வடகிழக்கு மாகாணத்தை இரண்டாக பிரிக்கும்படி சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக தெரிவுக்குழுவிற்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.பி.ஸி தெரிவித்தது.

தெரிவுக்குழு கிழக்கே உள்ளூராட்சி தேர்தலை நடத்துமாறு சிபார்சு செய்துள்ளபோதிலும இங்கு வேட்பாளர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர முடியாது எனசிறிலங்கா பாதுகாப்பு படையினர் கூறிவிட்டனர்,

## திலீபன்

வுகளையும் சித்திரிக்கும் வகையிலும் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இக் கலை நிகழ்வுகளில் பெருமளவு பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி வருகின்றனர்.

மேலும் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் அனைத்தும் இணைந்து நாளை வெள்ளிக்கிழமை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அடையாள உண்ணா நோன்பினை அனுஷ்டிக்கவுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் அனைத்து பொது மக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் இலவச போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எனவே இந்நோன்பில் கலந்துகொள்ள விரும்பும் நிறுவனங்களும் பாடசாலைகளும் போக்குவரத்து ஒழுங்குகளுக்கு முன்கூட்டியே சுற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையம் அல்லது சிற்றூர்தி சேவை சங்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி இணையத்தின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அச்சுவேலி சிற்றூர் மக்களினால் நாளை வெள்ளிக்கிழமை அச்சுவேலி மகாழடி

## சிங்கள

க்கு அளித்த பேட்டியில்;

இராணுவத்தில் ஆட்களைத் சேர்க்கும போது அவர்கள் தொடர்பாக முழு விபரத்தையும் பெறாமல் சேர்க்கப்படுவதினால் தெற்கில் சில ''பயங்கரவாத'' இயக்கத்தினரின் அங்கத்தினர்பலர் இராணுவப் பயிற்சியைப் பெறுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இக்குழுவினர் மீண்டும் 'பயங்கரவாத'த்தில் ஈடுபடும் அறிகுறிகள் தென்படுவதாகவும் ஆனால் தற்போது மிக குறைந்தளவே 'பயங்கரவாதம்' தலை தூக்கியிருப்பதாகவும், இவ்வாறு இவர்கள் இராணுவத்தில் இருக்கும் போது 'பயங்கரவாதம்' அதிகரிக்குமாயின் அது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

## மட்டு

மாடக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்,

இதேசமயம், வேறு கிராமங்களில் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் ஏக்கருக்கு 75 புசல் அளவில் மட்டுமே விளைபொருளை மட்டக்களப்பு நகரத்திற்கு ஏற்றி வந்து சந்தைப் படுத்த வேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

வைரவர் ஆலய முன்றலில் அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

இவ் உண்ணாவிரதத்தை அச்சுவேலி சிற்றூர் பொறுப்பாளர் திரு. மதியழகன் ஆரம்பித்து வைப்பார். அச்சுவேலி பஸ்நிலையத்தில் தியாகி திலீபனின் வாழ்க்கை வரலாறுகள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி பாடசாலைகள் மட்டத்திலும் லெப். கேணல் திலீபனின் நினைவாக சிற்றுரைகள், நினைவுரைகள் நடைபெற்று வருகின்றன பாடசாலையில் வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட சில மணிநேரம் இதற்கென ஒதுக்கி பாடசாலையில் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் திலீபனின் உருவப்படத்திற்கு முன்பாக உரை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் முதலமை மாணவர்களால் திலீபனின் வரலாறும் மற்றும் மாவீரர்களின் வரலாறுகளும் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன.

தற்கொடையாளி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவுநாளையடுத்து நேற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நினைவு விழா நடைபெற்றது. இந்நினைவு விழாவை வடமராட்சி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

வடமராட்சி கோட்டத்தில் உடுப்பிட்டி ஞானவைரவர் ஆலயப் பகுதியில் அமைந்த பிரதான பந்தலில் சிறுமி ஒருவர் நாளையிலிருந்து உண்ணா நோன்பை ஆரம்பிக்கவுள்ளார்

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு விழா இன்று யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரியிலும் பண்டிதர் குடியிருப்பில் உள்ள சண்முகநாதன் வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் போது விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் நினைவு நாள் உரையும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இதில்ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் தமிழீழ மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தீவகக் கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

அத்துடன் கடற்புலிகளின் வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட பாசையூர் சென் அன்ரனீஸ் மைதானத்தில் தியாகி திலீபனின் நினைவாக அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. குருநகர் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சதீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிகளவு மக்கள் கலந்து கொண்டனர்.


## கொக்குவில் இந்துக்கல்லூரி
## வருடாந்த
## இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்: வெள்ளிக்கிழமை 24-09-1993
நேரம்: பிற்பகல் 2 மணி.

பிரதம விருந்தினர்:
திரு. இரா. சுந்தரலிங்கம்
வடமாநில கல்விப் பணிப்பாளர்

பரிசில் வழங்குபவர்:
திருமதி தேவராணி சுந்தரலிங்கம்

பழையமாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தியாகி திலீபனின் ஈகைச்சுடர் ஏற்றப்படும்

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை)

தங்கள் நல்வரவை நாடி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
(சி/7476) மாணவர்கள்.



## கொக்குவில் இந்துக்கல்லூரி

அன்புள்ள பழைய மாணவர்களே,

எமது தாயின் முக்கிய திருநாளான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வெள்ளிக்கிழமை (24-09 93) நடைபெறவிருக்கின்றது. தங்கள் வருகையினை தாய் அன்புடன் எதிர்நோக்கி நிற்கின்றாள்.

(சி/7477) அதிபர்.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 22-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11015

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

27-922, 42-0992, 24-5036, 24-3262, 24-0521
22-9193, 24-7267, 41-9487, 24-1250, 24-4481
27-4024, 24-3594, 26 4436, 28-4183, 26-3130
42-1722, 26-7353, 26-2764, 27-9649.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

41-5178, 27-9416, 27-4239, 40-7351, 24-8864
26-1602, 41 9480, 26-1496, 41-9396, 26-8138
42-9326, 28-5294.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது